Registered as a News paper | பக்கங்கள் - 08 | விலை - ரூபா 07

# தமிழ் அலை
Tamilalai
தினசரி

அதிநவீன தொழில்நுட்பத்தில்
உங்கள் அச்சுப்பதிப்புக்களை
(கறுப்புவெள்ளை, கலர்)
விரைவாக செய்து கொள்ள
நீங்கள் தெரிவுசெய்ய வேண்டிய
ஒரே இடம்:
நித்தி பதிப்பகம்
பிரதான வீதி
கொக்கட்டிச்சோலை
தொலைபேசி. 065. 2226110

அலை - 01 | 01-01-2004 வியாழக்கிழமை | ஒலி - 88

# வவுனியாவில் இரு இளைஞர்கள் கைகள் கட்டப்பட்டு மர்மக் கொலை!

## சிறிலங்கா படைத் தரப்பு மீது மக்கள் சந்தேகம்

(வவுனியா நிருபர்)

**வவுனியா மம்மை படுப்பகுதியில் மணல் ஏற்றச் சென்ற இருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் வவுனியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியு ள்ளதுடன் மக்களி டையே அச்சம் தோன்றியுள்ளது.**

வவுனியா பம்மைமடுப் பகுதிக்கு மணல் ஏற்றச் சென்ற தெற்கு இலுப்பைக்குளத்தைச் சேர்ந்த ஜஸ்ரின் பெர்னாந்து (24) தெய்வேந்திரன் துஷியந்தன் ஆகியோரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரது கைகளும் பின்னுக்கு கட்டப்பட்ட நிலையில் முகத்தில் எரிகாயங்கள் காணப்பட்டதுடன் தலையில் துப்பாக்கி சூடுகாணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரு நாட்களுக்கு முன்னர் இந்த இரு இளைஞர்களும் மணல் ஏற்றுவதற்காக சென்றதாகவும் இவர்கள் வீடு திரும்பாததையடுத்து உறவினர்கள் பொலிசாரிடம் முறையிட்டுள்ளனர்.

இதேவேளை நேற்று பொதுமக்கள் இரு சடலங்களையும் கண்டு பொலிசாரிடம் தகவல் தெரிவித்ததையடுத்து சடலங்கள் மீட்கப்ப

(தொடர்ச்சி 8ம் பக்கம்)




## ஏறாவூர் நகரில்
# முச்சக்கர வண்டி சாரதிகள், உள்ளூராட்சி மன்ற நிருவாகப் பிணக்குத் தீர்வு

(ஏறாவூர் நிருபர் ஐ.எல்.றூமி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதான பட்டினங்களில் ஒன்றான ஏறாவூர் நகர முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கத்திற்கும் உள்ளூராட்சி சபை நிருவாகத்தினருக்குமிடையே கடந்த சில தினங்களாக இருந்து வந்த முறுகல் நிலை பேச்சுவார்த்தை மூலம் சுமுகமாக தீர்க்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் நகர பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இப்பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

பிரதேச சபைத் தவிசாளர் ஏ.அப்துல் நாஸர் மற்றும் உறுப்பினர்கள், வர்த்தகர் சங்கத் தலைவர் எஸ்.எச். அபூஹனிபா, பி.ஐ. பல்லேவள ஆகியோருடன் முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கத் தலைவர் யு.எல்.முகைதீன் பாவா உள்ளிட்ட பிரதிநிதிகள் இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

ஏறாவூர் நகரின் மத்திய பஸ் தரிப்பிடத்தில் முச்சக்கர வண்டிகள் தரித்து நிறுத்தப்படுவதனால்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# கல்குடா கல்வி வலயத்தில் 12 பாடசாலைகள் புதிதாக திறப்பு

(நமது நிருபர்)

கல்குடா கல்வி வலயத்தில் புதிய 2004ம் ஆண்டில் 12 பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்குடா கல்வி வலயப் பொறுப்பாளர் கேசவன் தமிழ்அலைக்கு தெரிவித்தார்.

கோறளைப்பற்று வடக்கு பிரதேசத்தில் எட்டு இடங்களிலும் கோறளைப்பற்றில் நான்கு இடங்களிலும் இப்பாடசாலைகள் அமையவுள்ளன.

கோறளைப்பற்று வடக்கு வாகரைக் கோட்டத்தில் சேனைக் குடியிருப்பு, ஆண்டான்குளம், அம்பன்தனாவெளி, வெருகல், குச்சாங்கேணி, தட்டுமுனை, இறால்ஓடை, மாவடி ஓடை ஆகிய எட்டு இடங்களிலும் கோறளைப்பற்றில் பிரம்படித்தீவு, சின்னவெம்பு, தடானை, கூழாவடி ஆகிய இடங்களிலும் இவை

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# வரி நிலுவைமுற்றாக செலுத்தியோர் தண்டத்தை நீக்குவதற்கு சலுகை

(ந.கிரிதரன்)

வருமான வரி விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் 31.02. 2002க்கு முற்பட்ட வரி நிலுவைகளுக்கான தண்டங்களை நீக்கி தவறுகையில் உள்ள வரியை அறவிடுமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பிராந்திய பணிமனைகளுக்கு அறிவித்துள்ளது.

வருமானவரி விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் 2ம் பிரிவின் கீழ் சொத்துக்களை வெளிப்படுத்தியவர்களுக்கும், வெளிப்படுத்துகை செய்யாதவர்கள் வரி நிலுவையை முற்றாக செலுத்தியிருப்பதால் தண்டத்தை நீக்குமாறும் வரி அறவிடுகை மற்றும் பிராந்திய பனிமணைகளுக்கான ஆணையாளர் எம்.டி.எச்.ஹேரத் அறிவித்துள்ளார்.

## சித்தாண்டி முருகன் ஆலயத்தில் திருவெம்பாவை விழா

(நமது நிருபர்)

சித்தாண்டி ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயிலில் திருவெம்பாவை விழா 28.12.2003 தொடக்கம் மிகவும் பக்தி பூர்வமாக நடைபெறுகிறது.

இந்நிகழ்வு எதிர்வரும் 7ம் திகதி அன்று பூரணை விரதம், திருவாதிரை விசேட பூசை, ஆருத்ரா

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# மட்டக்களப்பில் புதுவருட கொண்டாட்டம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புதுவருடப் பிறப்பை மிகக்கோலாகலமாக மக்கள் கொண்டாடினர்.

எங்கும் பட்டாசு கொழுத்தி வான வேடிக்கையில் ஈடுபட்டு கொண்டாடிக் குதூகலித்தனர்.

இதேவேளை மட்டக்களப்பு நகரிலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் வருடப் பிறப்பையொட்டி நள்ளிரவு ஆராதனை இடம்பெற்றது.

போர் ஓய்வு நிலை என்பதால் பூசை வழிபாடுகளில் அதிகளவு மக்கள் கலந்து கொண்டனர்.

மற்றும் இந்து ஆலயங்களிலும் பூசை வழிபாடுகள் இடம்பெற்றது.

## போடியார் பொறி வெடி

ஜனாதிபதி தன்வசமுள்ள அமைச்சுக்களை கொண்டு எதையும் சாதிக்க முடியாது

-செய்தி-



அப்ப கதிராமரக் கொண்டுதான் சாதிக்கிறாவாக்கும்....

மலரும் புத்தாண்டில் சாந்தி, சமாதானம் ஏற்பட வாழ்த்துகிறோம்

தரமான 22 கரட் தங்க நகைகளை குறுகிய காலத்தில் உத்தரவாதத்துடன் செய்து பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

ஏ.கே.எஸ்.
நகை மாளிகை
பிரதான வீதி
களுவாஞ்சிகுடி

அனைவருக்கும் எமது இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

அழகிய தங்க நகைகளை நேர்த்தியான முறையில் உத்தரவாதத்துடன் குறித்த நேரத்தில், குறைந்த விலையில் செய்ய நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்.

கீர்த்தனா நகையகம்
ஆஸ்பத்திரி வீதி
களுவாஞ்சிகுடி
தொலைபேசி.065.2250340

தமிழ்அலை
Tamilalai
பிரதான வீதி
கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065. 2226110
தொலைநகல:- 065. 2226110
மின்னஞ்சல்:- tamilalai32@yahoo.com,
இணையத்தளம்:- www.tamilalai.net

29.12.2003

## அமைதி சமாதானம் புதிய ஆண்டில் பிறக்கட்டும்

வடக்கு கிழக்குத் தமிழ் மக்களுக்கு இடைக்கால அதிகாரப்பகிர்வாவது கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட 2003ம் ஆண்டு அந்தப் பணியை நிறைவேற்றாது தமிழினத்தை ஏமாற்றி விட்டு விடைபெற்றுச் செல்கின்றது.

2003ம் ஆண்டின் நடுப் பகுதி வரை சமாதான முன்னெடுப்புக்கள் நல்லனவாக நம்பிக்கையூட்டுவனவாகக் காணப்பட்ட போதும் வருட இறுதிப்பகுதியில் ஜனாதிபதி மூன்று அமைச்சுப் பதவிகளை பறித்தெடுத்தமை அரசுக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்குமிடையில் சிக்கல்களை உருவாக்கியுள்ளதுடன் விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களை வெகு தூரத்துக்கு எட்டத் துரத்தியுள்ளது.

தற்போது புதிய ஆண்டில் நாம் பிரவேசிக்கின்றோம். போர் ஓய்ந்திருந்த போதும் சமாதானம் மலர வேண்டும் என்பதே தமிழ் மக்களதும் விடுதலைப் புலிகளதும் எதிர்பார்ப்பு.

அந்தப் பணியினை சுமந்து கொண்டு 2004ம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றோம்.

அரசியல் அரங்கில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான அதிகாரக்குத்து வெட்டுக்கள் தீர்ந்த பாடில்லை. தொடர்கதையாகிக் கொண்டு செல்வதால் எதிர்காலத்தில் சமா தானம் ஏற்படாது என்ற ஐயத்தை தமிழ் மக்களிடையே பிறந்துள்ள புத்தாண்டு ஏற்படுத்தியுள்ளது.

எனவே சமாதானத்தின் மேல் சகல தரப்பினரும் நம்பிக்கை கொண்டு அதனைக் கட்டியெழுப்ப முன்வர வேண்டும்.

தற்போது ஜனாதிபதிக்கும் அரசுக்குமிடையில் தொடரும் அதிகார இழுபறி நிலை முற்றிக் கொண்டு செல்வ தால் எவ்வித இலாபமுமில்லை. அதனை ஒரு முற்றுப்புள்ளிக்குக் கொண்டு வருவதுடன் அனைத்து தரப்பினரும் சமாதானத்தை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்.

மாறாக அரசியல் அதிகார இழுபறிக்குத் தீனி போடும் வகையில் இனவாதத்தைக் கக்கினால் யுத்த வேட்டுக்கள் மீண்டும் முழங்கும் என்பது உறுதி. எனவே யுத்த வேட்டுக்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து பட்டாசு வெடிச்சத்தம் பண்டிகைக் காலங்களில் நிரந்தரமாக ஒலிக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். அந்த வகையில் புதிய ஆண்டில் அமைதி, சமாதானம் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

# சிங்களத் தலைமைகளின் கொடூரச் சுவடுகள்

பல வருடங்களாக இழுத்தடிக்கப்பட்டு எந்த முடிவும் இல்லாமலேயே முடிவுற்றது. 1993ல் பிரேமதாச இறக்க பதவிக்கு வந்த விஜயதுங்க தமிழர் பிரச்சினை என்பது வெறுமனே ஒரு பயங்கரவாதப் பிரச்சினை என்றும் தமிழர்களுக்கு கொடுக்க வேண்டிய உரிமைகள் கொடுக்கப்பட்டு விட்டன என்றும் கூறிப் புலிகளை இராணுவ ரீதியில் வென்று விட்டால் தமிழர் பிரச்சினை முடிந்து விடும் என்று செயற்பட்டார். 1994ல் நாட்டின் சமாதானத்தை ஏற்படுத்துவதாகக் கூறி மக்களது அங்கீகாரம் பெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் சந்திரிகா தலைமையிலான அரசு பதவிக்கு வந்தது. 02.09.1994க்கும் 18.04.1995க்கும் இடையிலான 6 மாத காலங்களில் இலங்கை அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடித மூலமான பரிமாற்றம் இடம்பெற்றது.

இவ்வாறாக 70 கடிதங்கள் பரிமாற்றப்பட்டன. அவை இரு தரப்பினரிடையேயும் நல்லுறவை வளர்க்கத்தவறின. இக்காலத்தில் நான்கு சுற்றுப் பேச்சுவார்த்தையும் இடம் பெற்றன. ஆனால் இவை முன்னைய பேச்சுவார்த்தைகள் போன்று அர்த்தமற்றனவாயின.

டிசம்பர் 2001ல் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசு பதவிக்கு வந்தது. நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் 2002 ஏப்ரலில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசிற்கும் இடையில் ஏற்பட்ட போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து நோர்வே நாட்டின் மத்தியஸ்தத்துடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டன. மத்தியஸ்தம் என்று வரும் போது அது இரு வகையாக அமைகின்றது.

1. மூன்றாவது நாடு ஒன்று சர்வதேச அரங்கில் தனது பலத்தை உபயோகப்படுத்தி மத்தியஸ்தம் வகிப்பது. பொஸ்னியாவில் அமெரிக்காவும், இலங்கையும், இந்தியாவும் இவ்வகையில் நடந்து கொண்டன. மற்றையது சம்மந்தப்பட்ட இரு தரப்பினரிடையேயும் நம்பிக்கையை வளர்த்து அவர்கள் சுமுகமான முறையில் கலந்துரையாட வழிவகுக்கும் செயற்படுத்துனராக இருத்தல். இலங்கையைப் பொறுத்த வரை இலங்கையில் உள்ள பிரச்சினை இரு தரப்பினரிடையேயும் நீண்ட கால அனுபவங்களினால் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடு, அச்சம், அவநம்பிக்கை, குற்றச்சாட்டுக்கள் போன்றவற்றின் மோதல், இதற்கு இரு தரப்பினரும் பரஸ்பர புரிந்துணர்வு உள்ளவர்களாக மாறும் சூழல் உருவாக்கப்பட வேண்டும். இராணுவ ரீதியில் நடவடிக்கைகளைத் தொடர்ந்த வண்ணமே தொடரப்படலாம். என்ற அவ நம்பிக்கையுடன் இருக்கும் வரை பிரச்சினைகளை நிரந்தரமாகத் தீர்க்க முடியாது.

**தமிழர்களது இனப்பிரச்சினையின் பின்னணி**

பொதுவாக பிரச்சினை ஒன்று தோன்றுவதற்கு முதற்காரணம் முன்னுரிமையும் பாராபட்சமுமேயாகும். இதுவே இன முரன்பாட்டிற்கும் முக்கியமான காரணமாகும். பல இனங்கள் வாழுகின்ற இலங்கை போன்ற நாட்டில் ஒரு இனத்திற்குச் சார்பாக சட்டங்கள் இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுமாக இருந்தால் இந்நாட்டில் காணப்படும் ஏனைய சுதேச இனங்கள் பாதிக்கப்படும். இதனால் என்றோ ஒரு நாள் சிறுபான்மை இனங்கள் ஒன்று சேர்ந்து பெரும்பான்மையினருக்கு எதிராகப் போராட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். ஈழத்தமிழர்களைப் பொறுத்தமட்டில் இது விதிவிலக்கல்ல. இழந்த தமது தாயகத்தைப் போராடி மீட்பது என்ற முடிவு திடீரென்று எடுக்கப்பட்ட ஒன்றல்ல.கசப்பான அனுபவங்கள், ஏமாற்றங்கள், பாரிய இழப்புக்கள், தொடர்ச்சியான அரச பயங்கரவாதம் போன்றவற்றால் ஏற்பட்ட முடிவுதான் அது. இந்த வகையில் தமிழ் மாணவர்களின் கல்வியில் ஏற்பட்ட தடையும் ஈழத்தமிழர் பிரச்சினையும் பெரும் பங்கு வகிக்கின்றது.

1960 களில் இலங்கையில் இருந்த பாடசாலைகளில் பெரும்பாலும் இந்து, பௌத்த, கிறிஸ்தவ அமைப்புக்களின் மேற்பார்வையிலேயே இயங்கிவந்தன. 1960லும் 1961லும் பெரும்பாலான பாட.சாலைகள் தேசிய மயமாக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து பாட விதானங்கள் உட்பட பாடசாலை நிர்வாகம், ஆசிரியர் நியமனம், பாடசாலை நூலக நிர்வாகம் போன்ற எல்லாவற்றிலுமே அரசியல் இடம்பிடித்துக் கொண்டது. இது ஒரு



வகையில் தமிழீழப் பகுதி மாணவர்களின் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்தியது. இது தவிர இங்கு முக்கியமாக குறிப்பிட வேண்டிய மற்றொரு விடயம் சிங்களம் அரச கரும மொழியாக்கப்பட்டதைத் தொடர்ந்து அரச பதவி பெறு வதில் நாட்டம் கொண்ட தமிழ் பேசும் மக்க ளின் ஒரு பகுதியினர் சிங்கள மொழி மூலம் பாடசாலைகளில் தம் பிள்ளைகளை கல்வி பயிலச் செய்தனர். குறிப்பாக கொழும்பையும், அதனை அண்டிய பகுதிகளிலும் இருந்த முஸ்லிம்களையும் அப்பகுதிகளில் நெடுநாட்கள் இருந்த சில தமிழர்களையும் இதனுள் அடக்கலாம். இதனால் ஏற்கனவே சிங்களவர்களாக மாறிய தமிழர்களை விட இன்னும் சிலர் காலப்போக்கில் சிங்களவராகும் நிலை உருவாகியது. இது இலங்கையில் தமிழ் இனத்தின் எதிர்காலத்துக்கு ஒரு சவாலாகவே அமைந்தது.

பாடப்புத்தகங்கள் எழுதும் சபையில் சிங்கள பௌத்த தேசியத்தை வலியுறுத்தியோரே இடம்பெற்றனர். இவர்களுக்குத் தாம் செய்யும் எதனையும் சிங்கள அரசுகள் ஆதரிக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. இந்த நிலை குறித்து (Reggie Siriwardene) றெஜி சிறிவர்த்தன என்ற சிங்கள அறிஞர் ஒருவர் "National unity of Communisiam" ( இனவாதத்தில் தேசிய ஒருமைப்பாடு) என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் பின்வருமாறு எழுதியுள்ளார். 1982 வரையுள்ள பாடப்புத்தகங்கள் இனங்களுக்கிடையிலான ஒற்றுமை பேண்" சபையினரால் பரிசீலிக்கப்பட்ட போது பாடசாலை மாணவர்கள் மத்தியில் இன வேறுபாட்டை வளர்ப்பதில் இப்புத்தகங்கள் எவ்வாறு செயற்பட்டன என்பது பெறப்பட்டது. தமிழ்ப் புத்தகங்களில் இனங்கள், மதங்களுக்கு இடையில் வேறுபாடு காட்டக் கூடாது என வலியுறுத்தப்படும். அதே வேளை சிங்களப் புத்தகங்களில் ஒரு இனத்தின் பெருமை பற்றியே வலியுறுத்தி சிங்கள பௌத்த கலாசாரத்தைப் போற்றி எழுதப்பட்டிருந்தது வெளிக்கொணரப்பட்டது. இது இன்று வரை உபயோகத்தில் உள்ளது. 1983 ஜனவரி 1ல் ஜனாதிபதியால் கையளிக்கப்பட்ட இப்புத்தகத்தில் 1948ல் இலங்கை பெற்ற சுதந்திரம் சிங்களவர்களாலேயே பெறப்பட்டது என்றும், அது சிங்களவர்களால் மட்டுமே அனுபவிக்கப்பட வேண்டும் என்றும் கூறப்படுகின்றது. இளம் வயதில் இருந்தே சிங்கள சமூகத்தில் பிள்ளைகளிடம் இனவாதம் இவ்வாறு விதைக்கப்படுவது அதுவும் அரசின் அங்கீகாரத்துடன் செயற்படுவது ஒரு நாட்டின் அமைதிக்குப் பங்கத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமே இல்லை.

**தரப்படுத்தல்**

1970ல் சிறிமாவோ அரசாங்கத்தில் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் முறை தொடர்பாகக் கொண்டு வரப்பட்ட தரப்படத்தல் முறை இனங்களுக்கிடையேயான பிரச்சினையை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகித்தது. 1971ல் இவ்வரசாங்கம் கொண்டுவந்த சட்டப்படி மருத்துவ பீடத்துக்குத் தெரிவு செய்யப்படுவதற்கான தகுதி பெறும் தமிழ் மாணவர்களுக்கு குறைந்த பட்சம் 400க்கு 250 புள்ளிகள் தேவை என்றும், சிங்கள மாணவர்களுக்கு இது 229 என்றும் நிர்ணயிக்கப்பட்டது. அத்தோடு இரு தரப்பினரும் ஆங்கிலத்தில் பரீட்சைக்குத் தோற்றினாலும் இவ் விதியே பின்பற்றப்படும் எனப்பட்டது.

தமிழ் மக்களின் கல்விக்கு இடையூறு விளைவிக்கவும் , அவர்களது வரலாற்றை மறைக்கவும் சிங்கள அரசுகள் கொண்டிருந்த கடும் போக்கும் 1981ம் ஆண்டு மே மாதம் 31ம் திகதி அந்த அரசின் காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்த காமினி திஸ்ஸாநாயக்காவின் தலைமையிலான குண்டர்கள் யாழ் நூலகத்துக்கு வை

**அரசையூர் ஏ. கருணா**

த்த தீயில் இருந்து வெளிப்பட்டது. யாழ் மக்களின் பண்பாட்டுக் கருவூலமாக விளங்கிய இந்த நூலகம் சுமார் 98 ஆயிரம் புத்தகத் தொகுதிகளையும், அரிதான கையெழுத்துப் பிரதிகளையும் பண்டைய ஏட்டுச் சுவடிகளையும் கொண்டிருந்தது. தாவீது அடிகள் இந்நூல் நிலையம் எரிக்கப்பட்ட செய்தி கேட்டு மாரடைப்பால் மரணமடைந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து சிங்களப் பேரினவாத அரசுகள் ஏற்படுத்திய ஒடுக்கு முறை நடவடிக்கைகளால் தமிழர் தமக்கென்று தனியான அரசு ஒன்று நிலவுவதே நிரந்தரமான தீர்வுக்கு வழிகோலும் என்ற முடிவுக்கு வந்தனர். 1976ல் வட இலங்கையில் வட்டுக்கோட்டையில் பண்ணாகம் என்ற இடத்தில் தமிழர் கூட்டணியின் தலைமையில் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. இம்மாநாட்டில் மலையகத் தமிழர், தமிழ் பேசும் முஸ்லிம்கள், தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி முதலிய தமிழர் பிரதிநிதிகள் பங்குபற்றினர். வடக்கு கிழக்கு தவிர்ந்த பகுதியான மலையகத் தமிழர்களதும் நலனை முன்னிட்டு இம்மாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. "சுதந்திரமானதும், சமயச்சார்பற்றதும், இறைமையுடையதுமான சோஷலிச தமிழீழ அரசொன்றும், அதற்கான அரசமைப்பொன்றும் மீளமைக்கப்பட வேண்டும் என்றும் அது ஒவ்வொரு குடிமகனதும் சுயநிர்ணய உரிமையைப் பாதுகாப்பதாகவும், ஒவ்வொரு தமிழனதும் பாதுகாப்பான வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிப்பதாகவும் அமைய வேண்டும்.

இவ்வாறு அமைக்கப்படும் அரசின் பகுதிகளாக வடக்கும், கிழக்கும் கொள்ளப்படும் என்று முடிவு செய்யப்பட்ட போது மலையகத் தமிழர்கள் இந்த இணைப்புக்குள் எவ்வாறு வர முடியும் என்ற கேள்வி எழுந்தது. அதற்குப்பதில் அளித்த எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் "இவ்வாறு விநோதமான செயல்களை நாம் சில சமயங்களில் செய்வதுண்டு. ஆனால் சிங்கள அரசுகள் எம்மை எந்த நேரமும் ஒதுக்கித்தள்ளும் என்பது நிச்சயம்" என்றார். இத்தகைய கருத்தின் பின்னணியிலேயே இம்மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி தமிழர்கள் அகிம்சை வழியிற் போராடித் தமது உரிமைகளை மீட்டெடுப்பது என்பது சாத்தியமில்லை என இளைஞர்கள் நினைத்தனர். இளைஞர்கள் இந்த முறையில் நம்பிக்கை இழந்து தம்மை விடுதலை இயக்கத்துடன் இணைத்துக் கொள்ள முற்பட்டிருந்தனர். அவர்கள் இது வரை காலமும் (1920 - 1980 வரை) தமிழ் அரசியற் தலைவர்கள் சிங்கள அரசுகளுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளின் அர்த்தமற்ற தன்மை குறித்து வெறுப்பும் அவ நம்பிக்கையும் கொண்டிருந்தனர்.

(தொடரும்)

# மீள்குடியேற்ற வாசிகள் பொருளாதாரத்தை உயர்த்த ஐ.ஓ.எம் நிறுவனம் உதவி

(ஜீவா)

திருக்கோவில் - காஞ்சிரங்குடா கிராமத்தில் மீள்குடியேறியுள்ள 186குடும்பங்களின் பொருளாதார நிலையை ஆறுமாத காலத்துக்குள் அதிகரிக்கச் செய்யும் நோக் குடன் ஐ.ஓ.எம் சர்வதேச அரசசார் பற்ற நிறுவனம் பல்வேறு சுய தொழில் ஊக்குவிப்புக்களை இம்மக் களுக்கு வழங்கவுள்ளதாக கிராம சேவை அலுவலர் எஸ். பார்த்திபன் அலைக்குத் தெரிவித்தார். இத்திட்டத்தின் அடிபபடையில் குடும்பத் தலைவர்களின் சுயதொழில் ஆற்றல், திறன், ஆர்வம் சுயதொழில் ஊக்கவிப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட 55குடும்பங்களுக்கு இவ்வருட பெரும் போக நெற்செய்கைக்காக தலா இரு மூடை கள் விதை நெல்லும், இரு அந்தர் யூரியாவும் வழங்கப்பட்டு செய்கை பண்ணப்பட்டுள்ளது. மேலும் இரு குடும்பத்தலைவர்கட்கு வாவி மீன்பிடிப்பதற்கான தோணி வலை என்பனவும், 46 குடும் பங்களுக்கு நல்லின ஆடுகளும் 83குடும்பங்கட்கு நல்லின பசுக்களும் விரைவில் வழங்கப்படவுள்ளதாக நிறுவனத்தின் கிழக்கு மாகாணப் பொறுப்பாளர் சில்வெஸ்ரார் தெரிவித்தார். இதேசமயம் இக் குடும பங்களனைத்திற்கும் தலா ஒவ்வோர் மண்வெட்டி, கோடரி என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

# தமிழீழ வானொலியில் புத்தாண்டு நிகழ்வு!

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகளின் தமிழீழ வானொலிச் சேவை சர்வதேச தமிழ் ஒலிபரப்பு நிறுவனங்களுடன் இணைந்து இன்று நள்ளிரவு 11.30 மணிமுதல் நாளை இரவு 10.30 வரை புத்தாண்டு வாழ்த்துச் சிறப்பு நிகழ்ச்சி ஒன்றினை நடத்தவுள்ளது

லண்டன் ஐ.பி.சி வானொலி, அவுஸ்திரேலியா தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம், கனடா தமிழ்ச் சேவை வானொலி, மற்றும் வீடியா வொய்ஸ்', தமிழ் நாதம் ஆகியவற்றின் இணையத் தளங்களின் ஊடாக தமிழீழ வானொலியின் புத்தாண்டு சிறப்பு நிகழ்ச்சி ஒலி பரப்பாகும்.இதனை இலங்கையில் உள்ள வர்கள் மட்டுமன்றி உலகெங்கிலும் வாழும் தமிழர்கள் கேட்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது

# மாகாண சபை அங்கத்தவர் தொகை அதிகரிப்பு

(நமது நிருபர்)

எதிர்வரும் மாகாண சபை தேர்தல்களின் போது ஒவ்வொரு மாகாண சபையிலும் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். இருந்த போதிலும் வடக்கு கிழக்கு மாகாணங்களினது எண்ணிக்கை அதிகரிக்கப்பட மாட்டாது.

சனத்தொகை அதிகரிப்புக்கு ஏற்ற வகையில் அங்கத்தவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அடுத்த வருடம் நடைபெற இருக்கும் மாகாண சபைத் தேர்தல்களைத் தொடர்ந்து அங்கத்தவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

# றூபஸ் குளப் புனரமைப்புக்கு ஜப்பான் நிதி உதவி!

(ஜீவா)

தம்பிலுவில் கமநல கேந்திர நிலையத்தின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களில் ஒன்றான றூபஸ் குளத்தை ஐந்து அடிகளால் உயர்த்தவும், இக்குளத்திற்கு அண்மித்த கிராமமான காஞ்சிரங்குடாவை முழுமையாக அபிவிருத்தி செய்வதற்குமாக 450 லட்சம் ரூபாவை ஜப்பான் அரசாங்கம் வழங்க முன்வந்துள்ளது. இத்திட்டம் தொடர்பான திட்ட நகலைத் தயாரிப்பதற்கான தகவல்களைப் பெறும் பொருட்டு காஞ்சிரங்குடா மக்களுக்கு இரண்டரை நாள் செயலமர்வை சேவாலங்கா நிறுவனம் நடாத்தியு ள்ளதாக இணைப்பாளர் எஸ்.நாகராஜா தெரிவித்தார்.

இதே சமயம் , றூபஸ் குளப் புனரமைப்புத் திட்டம் முழுமை பெற்று அதி உச்சப் பயனை விவசாயிகள் பெற்றுக் கொள்வதாயின் இக்குளத்தின் நீர்ப்பாசனத் துக்குரிய அணைக் கட்டுகளான சின்னார் அணைக்கட்டு , பனையடி அணைக்கட்டு, காஞ்சிரங்குடா மேற்கண்ட அணைக்கட்டு ஆகியன புனரமைக்கப்படும். வாய்க்கால்கள் அனைத்தும் திருத்தப்பட்டும், துப்பரவு செய்யப்பட்டும், இதனுடன் தொடர்பு பட்டபாவட்டாக்குளமும், பசளைக்களஞ்சிய மத்திய வீதியும் செப்பனிடப்படல் வேண்டுமென விவசாயிகளின் கருத்துக் கணிப்பீட்டின் மூலம் அறிய முடிகிறது.

# ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் நேற்று காலமானார்!

(நமது நிருபர்)

வந்தாறுமூலையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நாகேந்திரன் அவர்கள் நேற்று தனது 62வது வயதில் காலமானார். இவரது ஈமைக்கிரியைகள் இன்று பிற்பகல் 4 மணிக்கு வந்தாறுமூலை சேமக்காலையில் நடைபெறவுள்ளது.

இவரது மறைவு குறித்து பல பொது அமைப்புக்கள் அனுதாபம் தெரிவித்துள்ளன. இவர் வந்தாறுமூலை கிராம அபிவிருத்திக் குழு, வந்தாறுமூலை கிராம அபிவிருத்திச் சங்கம், இளைஞர் கழகம், பட்டதாரிகள் ஒன்றியம், சமுர்த்திச் செயலணி, வந்தாறுமூலை ஸ்ரீ மகா விஸ்னு, நீர்முகப் பிள்ளையார், ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலயத்தின் நிர்வாக சபை ஆலோசகரும் கணக்குப் பரிசோதகருமாக கடமை புரிந்ததுடன் கிழக்குப் பல்கலைக் கழக கலைப்பீட அவை உறுப்பினராகவும், பகவான் ஸ்ரீ சத்தியசாயி பஜனை மண்டலி, வந்தாறுமூலை விஷ்னுவித்தியாலய அபிவிருத்தி சபை உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அமரர் நாகேந்திரத்தின் மறைவு கல்விச் சமூகத்துக்கு பேரிழப்பு!

(நமது நிருபர்)

வந்தாறுமூலைக் கிராமத்துக்கு மட்டுமன்றி மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்கு அமரர் நாகேந்திரம் அளப்பரிய பணி செய்துள்ளார். அவர் எம்மை விட்டுப் பிரிந்தது கல்விச் சமூகத்துக்கு பெரும் பேரிழப்பு இவ்வாறு ஓய்வு பெற்ற கல்குடா வலயப் பணிப்பாளர் சி.நாகேந் திரத்தின் மறைவு குறித்து வந்தாறுமூலை கல்வி அபிவிருத்தி சபை விடுத்துள்ள இரங்கற் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது அமரர்.சி.நாகேந்திரன் எம்மை விட்டுப் பிரிந்தது பேரிழப்பாகும் அவர் ஒரு கல்விமான் மட்டுமல்ல சிறந்த சமூக சேவகன் சமயப் பற்றாளர், சோதிட வல்லுனர் இவ்வாறான ஒரு மனிதனை வந்தாறுமூலைக் கிராமம் இழந்து தவிக்கிறது.

அமரர் நாகேந்திரத்தின் கல்விப் பாசறையில் புடம் போடப்பட்ட எத்தனையோ பேர் இன்று கல்வித்துறையில் பிரகாசிக்கின்றனர். இதற்கு வழிவகுத்தவர் சிரித்த முகத்துடன் அனைவரையும் அன்புடன் அரவணைக்கும் அன்னா எம்மை விட்டு பிரிந்தது கல்விச் சமூகத்துக்கு பேரிழப்பாகும். இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# காஞ்சிரங்குடா மக்களுக்கு சோவா நிறுவனம் உதவி!

(ஜீவா)

திருக்கோவில் செயலகப் பிரிவுக்குட்பட்ட காஞ்சிரங்குடாவில் மீள்குடியேறியுள்ள 186 குடும்பங்களில் 170 குடும்பங்களுக்கு தலா ஒவ்வொரு நுளம்பு வலையும் 11 கூரைத்தகடுகளும் நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த சோவா நிறுவனம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. மிகுதியாக விடப்பட்ட காலம் தாழ்த்தி மீள் குடியேறிய 16 குடும் பங்களுக்கும் இவ்வுதவிகள் விரை வில் கிடைக்கவுள்ளதாக கிராம சேவை அலுவலர் எஸ்.பார்த்தீபன் தெரிவித்தார்.

மேலும் இக்கிராமத்தில் மீள்குடியேறியுள்ள இந்துவனக்குறவர் இனத்தைச் சேர்ந்த 46 குடும்பங்களின் முன்பள்ளிக் கற்கைக்கும் முதியோர்க்கான முறைசாராக்கல்வி மூலம் எழுத் தறிவைப் புகட்டுவதற்காகவும் தற்காலிக கல்விக் கொட்டகைகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டன.இக்கிராமத்தில் காணப்பட்ட இரு கிணறுகள் புனரமைக்கப்பட்டும் புதிதாக ஓர் கிணறும் கட்டிக்கொடுக்கப்பட்டு குடிநீர்ப்பிரச்சினை ஓரளவு தீர்க்கப்பட்டதுடன் பொது மலசலகூட வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக் கப்பட்டு ள்ளதாக நிறுவனத்தின் இம் மாவட்ட உதவி முகாமை யாளர் எஸ்.சீலன் தெரிவித்தார். இக்கிராமத்தில் மேலும் பல பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தவும், இம்மக்களுக்குரிய நிந்தர அடிப்படை வசதிகளைக் விரைவாக ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் நிறுவனத்தின் கிளை அலுவலகமொன்றை இப்பிரதேசத்தில் திறக்கவுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

# காஞ்சிரங்குடா வாசிகளுக்கு விரைவில் மீள்குடியேற்றக் கொடுப்பனவு!

(ஜீவா)

திருக்கோவில் காஞ்சிரங்குடாவில் தற்சமயம் மீள் குடியேறியுள்ள 186 குடும்பங்களில் முதற்கட்டமாக 170 குடும்பங்களுக்குரிய மீள் குடியேற்றக் கொடுப்பனவாக தலா 25,000 ரூபாவை வழங்க நிகொட்" அமைப்பு அனுமதி அளித்துள்ளதாக கிராம சேவை அலுவலர் எஸ்.பார்த்தீபன் தெரிவித்தார். இதன் முதற்கட்ட நடவடிக்கையாக குடும்பத் தலைவர்கள் தமது பெயரில் ஓர் சேமிப்புக் கணக்கினை திருக்கோவில் மக்கள் வங்கிக்கிளையில் ஆரம்பிக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

இதே சமயம் ''நீப்" திட்டத்தின் கீழ் காஞ்சிரங்குடா மீள் குடியேற்றத்தைத் துரிதப்படுத்தி ஊக்குவிக்கும் நோக்குடன் காடழிப்பிற்கும் வீதிகள் புனரமைப்பிற்கும் தலா பத்து லட்சம் ரூபாவும், இரு மலசலகூடம், தற்காலிக பல்தேவைக் கட்டிடம் என்பனவற்றிற்கு 4 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அலுவலர் தெரிவித்தார்.

# மின்சாரம் தாக்கி மரணம்!

(எம்.யுவராஜ்)

சட்ட விரோதமான முறையில் மின்சாரம் பெற முயன்ற ஒருவர் மின்சாரம் தாக்கி மரணமடைந்துள்ளார்.

மட்டக்களப்பு குறிஞ்சாமுனையைச் சேர்ந்த 2பிள்ளைகளின் தந்தையான வேலாப்போடி விமலநாதன்(43) என்பரே உயிரிழந்தவராவார். படுவான்கரைப் பகுதியில் சட்ட விரோத மின்பாவனையை நிறுத்துமாறு விடுதலைப் புலிகள் மின்சார சபையினர் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டு வருவது குறிபிடத்தக்கது.




நெகோட்திட்டத்தின் உதவியுடன் வாகரை கட்டுமுறிவில் மீள் குடியேறியோருக்கான வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கான திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது இத்திட்டத்தில் அடிக்கல் நடுவதையும் புனர்வாழ்வு புனரமைப்பு பொறுப்பாளர் துரை சரீரம் தலைவர் யோகேஸ்வரன் ஆகியோர் உரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படத்தில் காதணலாம்.

(படம் வேதநாயகம்)

# எங்கள் பிள்ளைகளுக்கு நேர்ந்த கதி என்ன உறவினர்கள் கதறி புலம்பல்!

(நமது நிருபர்)

காணாமல் போன தமது பிள்ளைகள், உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதனை கண்டறிந்து தருமாறு கோரி படையினரால் கைதாகி காணாமல் போனோரது பெற்றோர், பாதுகாவலர் சங்கம் மற்றும் யாழ். மாவட்ட அன்னையர் முன்னணியினர் நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள மனித உரிமை ஆணைக்குழுவின் தலைமையகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். நேற்று 11.30 மணியளவில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் காணாமல் போன தமது பிள்ளைகள் மற்றும் உறவினர்களின் புகைப் படங்களையும் பிள்ளைகள், உறவினர்களை மீட்டுத்தருமாறு கோரும் வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர்.

95 ஆம், 96 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணாமல் போன தமது பிள்ளைகள், உறவினர்களுக்கு நேர்ந்த கதி குறித்து உண்மை நிலையினை எடுத்துக் கூறுமாறு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள் கதறி அழுதனர்.

கடந்த 7, 8 வருடங்களாக காணாமல் போன பிள்ளைகளைத் தேடி அலைகின்றோம். இன்னமும் ஒரு முடிவு கிடைக்கவில்லை. வீதி வீதியாக பிள்ளைகளை தேடி நோயாளர்களாக மாறிவிட்டோம் என்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட தாய்மார் அழுத வண்ணம் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தையடுத்து படையினரால் கைதாகி காணாமல் போனோர் சங்கத்தின் செயலாளர் எஸ். சற்குணம், மனித உரிமை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நிமால் ஜி. புஞ்சிகேவாவிடம் தமது மகஜரை கையளித்தார். தமது சங்கத்தின் கோரிக்கையினையும் அவர் பணிப்பாளரிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் ராதிகா குமாரசாமி அலுவலகத்தில் இல்லாமையினாலேயே அமைப்பின் செயலாளர் ஆணைக்குழுவின் பணிப்பாளரை சந்தித்திருந்தார்.

காணாமல் போனோர் தொடர்பாக விசாரித்து நடவடிக்கை எடுப்பதாக பணிப்பாளர் புஞ்சிகேவா உறுதியளித்ததாக சங்கத்தின் செயலாளர் சற்குணம் தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்புக்கு வருகை தந்துள்ள கைதாகி காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தினர் மற்றும் யாழ். மாவட்ட அன்னையர் முன்னணியினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை கொழும்பில் உள்ள நீதி அமைச்சின் முன்னாலும் ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தனர். ஆர்ப்பாட்டத்தினையடுத்து மகஜர் ஒன்றினையும் இவர்கள் அமைச்சின் செயலாளரிடம் கையளித்திருந்தனர்.

நேற்று மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்திய இவர்கள் கறுப்புப் பட்டிகளை அணிந்திருந்து தமது எதிர்ப்பினை எடுத்துக் காட்டியிருந்தனர்.

# ஜனாதிபதியின் பதவி நீடிக்கப்பட்டால் ஆளும் கட்சிக்கு பேராபத்து!

(நமது நிருபர்)

ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரின் பதவிக் காலம் சட்ட அடிப்படையில் 2006 ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டால் பிரதமருக்கும், ஆளும் கட்சிக்கும் பேராபத்தாக மாறிவிடும் என்று கிந்துஸ்தான் ரைம் பத்திரிகையின் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் கடந்த மாதம் பாதுகாப்பு, உள்துறை, மக்கள் தொடர்பாடல் அமைச்சுக்களை ஆளும் கட்சியின் பொறுப்பிலிருந்து பறித்தெடுத்தார்.

இதன் காரணமாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் ஏற்பட்ட அரசியல் பிணக்குகள் இன்னமும் தீர்ந்துவிடவில்லை. இந்த இழுபறி நிலையில் சந்திரிகா அம்மையாரின் பதவிக் காலம் சட்ட அடிப்படையில் 2006 ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டால் பிரதமருக்கும் ஆளும் கட்சிக்கும் பேராபத்தாக மாறிவிடும். அதே நேரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 2005ஆம் ஆண்டின் இறுதியில் ஜனாதிபதியாகப் பதவியேற்க முடியும் என்று மனப்பால் குடித்திருந்தார். ஜனாதிபதியின் பதவி நீடிப்பால் பிரதமரின் ஆசையும் நிராசை ஆகிவிடும். அத்துடன் ஜனாதிபதியின் பதவி நீடிப்பு பிரதமரின் சமாதான முயற்சிகளுக்கும் பாதகமாக அமைந்து விடும்.

# இன்று இலங்கையில் இரு தலைநகரங்கள் உள்ளதை அனைவரும் உணர வேண்டும்!

## மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி!

(நமது நிருபர்)

போரும் சமாதானமும் சந்திக்கும் பாதையின் சந்தியில் இன்று நாம் நின்றுகொண்டு இருக்கின்றோம். எங்களை எந்தப் பாதையால் அழைத்துச் செல்வது என்பதை ஸ்ரீலங்கா ஆட்சி யாளர்களே தீர்மானிக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி தமிழினி இவ்வாறு குறிப்பிட்டார்.கோப்பாய் பிரதேசிகை அலங்கரிப்பாளர்களுக்கான எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு சங்கத் தலைவர் த.சிவ குமார் தலைமையில் அச்சுவேலியில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே செல்வி தமிழினி மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-1983ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொழும்பு நோக்கிச் சென்று தொழில்புரிந்து கொண்டு இருந்தவர்களைப் பார்த்து அன்றைய ஜனாதிபதி போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்' என்று கூறினார். அன்று தமிழன் போரை விரும்பவில்லை' அத்தகைய அப்பாவித் தமிழர்களிடம்தான் ஜே.ஆரினால் சவால் விடப் பட்டது. இன்று நிலைமை அப்படியில்லை. புலிகளைப் பொறுத்த வரையில் பல்வேறு படிகளையும் கடந்து வளர்ச்சி அடைந் துள்ளார்கள்.

முன்னர் சிங்களப் பேரினவாதிகளால் தமிழர்கள் அடிபட்ட போதும், சுடப்பட்டபோதும் கையெடுத்துக் கும்பிடவும் 'சுட வேண்டாம் என்று அவர்களிடம் கெஞ்சவும் மட்டுமே முடிந்தது. ஆனால், இன்று தமிழனுக்கு என்று ஒரு படையே உண்டு. ஒரு தமிழன் தாக்கப்படுவானாக இருந்தால்கூட தட்டிக்கேட்கும் வல்லமை இன்று எமக்கு உண்டு.

பேச்சுக்களை புலிகள்தான் குழப்பிவருகின்றார்கள் என்று அரசும் சர்வதேச நாடுகளும் முன்னரெல்லாம் கூறிவந்தன. ஆனால், இன்று சமாதானப் பேச்சில் ஈடுபடவும் கைகொடுக் கவும் நாம் தயாராக இருக்கின்றோம்' அரசு தயாரில்லை. வவுனியாவைக் கடந்து தென்பகுதிக்குச் செல்வதாக இருந் தால் ஆண்கள் சந்தனப்பொட்டையும், பெண்கள் குங்குமப் பொட்டையும் அழித்துவிட்டுத் தம்மைத் தமிழர் என்று இனங்காட்டாது சென்ற காலம் ஒன்றுண்டு. இன்று அந்த நிலைமை முற்று முழுதாக மாற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது இரண்டு அரசியல் தலைநகரங்கள் காணப்படுகின்றன. கொழும்பில் ஸ்ரீலங்காவின் அரசியல் தலைமைப்பீடமும் கிளிநொச்சியில் தமிழ்மக்களின் தலைமைப் பீடமும் இயங்குகின்றன.

கொழும்பு வருகின்ற சர்வதேசத் தலைவர்கள் இன்று கிளிநொச்சியில் உள்ள தமிழர்களின் அரசியல் தலைமையகத்திற்கு வந்து பிரச்சினைகளைக் கேட்டறிந்து கதைத்துவிட்டே செல்கின்றார்கள்.

தமிழர்களையே தெரியாத கொழும்புவாழ் தமிழ் தலைவர்களைச் சந்தித்துவிட்டுச் செல்வதே முன்னர் இருந்த நிலைமை. அதனால் எந்தவகையான பிரயோசனமும் இல்லையென்பதை உணர்ந்து, தற்போது கிளிநொச்சிக்கு வந்து தமிழர் தலைமை யுடன் பேசிவிட்டுச் செல்கின்ற நிலைமை இன்று காணப்படு கின்றது.

நாம் அரசுடன் பேச்சில் ஈடுபடத் தயார்' சமாதானம் பேசவும் தயார் என்று கூறுகின்றோம். அதற்காகக் காத்துக் கொண்டு இருக்கின்றோம். ஆனால், தென்னிலங்கையின் தலைமைகள் பேச்சுக்குத் தயார் இல்லாத நிலையில் குழம்பிப்போய் உள்ளன. சமாதானம் விரும்பிகள் என்று கூறிக்கொண்டு முழு உலகையும் ஏமாற்றியவர்கள் இன்றுசமாதா னப்பேச்சுக்குவரமுடியாமல் திண்டாடுகின்றார்கள்.

புலிகளுக்கும் அரசுக்கும் இடையே நடந்த சமாதானப் பேச்சுக்கள் இன்று ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே நடைபெறும் பேச்சுக்களாக மாற்றம் பெற்றுள்ளன. எமது போராட்டத்தைப் பொறுத்த வரையில் எந்த அந்நிய சக்தியும் எமக்கு உதவி செய்யவில்லை. எமது மக்களே எமது போராட்டத்திற்கான சகல வளங்களையும் வழங்கினார் கள். ஆகையினால், நாம் யாருக்கும் பதில் கூறவேண்டியவர்கள் அல்லர். எமது மக்களுக்கே நாம் பதில் கூறக் கடமைப் பட்டவர்கள் - என்று தெரிவித்தார். தமிழீழ கல்விப் பேரவையின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் கவியன்பன், வலிகாமம் கோட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் தமிழ்மறவன், கிராம அலுவலர் யோகராசா ஆகியோரும் உரையாற்றினார்கள்.

# போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவுக்கு ஜனவரி 15ல் புதிய தலைவர் நியமனம்!

(நமது நிருபர்)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர் அடுத்த மாதம் 15 ஆம் திகதியளவில் நியமிக்கப்படவுள்ளார்.

விசாரணைக்காக நோர்வே நாட்டிற்கு திருப்பி அழைக்கப்பட்டுள்ள கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் டெலிவ்சனின் பதவிக்காலம் பெப்ரவரி மாதத்துடன் முடிவடையவிருப்பதால் அவரது இடத்திற்கு புதிய தலைவர் நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரியவருகிறது.

கடந்த செப்டம்பர் மாதம் 28 ஆம் திகதி முல்லைத்தீவு கடற்பகுதியில் ஆயுதங்களை ஏற்றி வந்த புலிகள் இயக்கத்தினர் கப்பலுக்கு இராணுவ இரகசிய தகவலை டெலிவ்சன் வழங்கினார் என ஜனாதிபதி குற்றம் சுமத்தியிருந்தார். அத்துடன் அவரை நோர்வே நாட்டிற்கு திருப்பி அழைக்கும்படியும் ஜனாதிபதி நோர்வே பிரதமரை கேட்டிருந்தார். அதனையடுத்து அக்டோபர் மாதம் டெலிவ்சன் நோர்வே நாட்டிற்கு திருப்பி அழைக்கப்பட்டார். இது தொடர்பாக கொழும்பில் உள்ள நோர்வே தூதரகத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட பொழுது டெலிவ்சன் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இதுவரை டெலிவ்சன் தொடர்பாக எந்த வித முடிவையும் நாம் எடுக்கவில்லை. இவரது விசாரணை குறித்து கண்காணிப்புக் குழுவில் அங்கம் வகிக்கும் ஏனைய நாடுகளுடன் கலந்தாலோசித்து வருகிறோம். அவரது பதவிக் காலம் பெப்ரவரி மாதத்துடன் முடிவடைகிறது என தெரிவிக்கப்பட்டது.

# காணாமல் போனோர் பெற்றோரை சந்திக்க ஜனாதிபதி மறுப்பு

(நமது நிருபர்)

யாழ். குடாநாட்டில் படையினரால் கைதாகி காணாமல் போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தினரை சந்தித்து பேசுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மறுப்புத் தெரிவித்துள்ளார். தற்போதைய நிலையில் எதிர்வரும் 10 தினங்களுக்கு சங்கத்தினரை சந்திப்பதற்கான சந்தர்ப்பம் இல்லை என்று ஜனாதிபதி செயலகம் காணாமல் போனோரது பெற்றோர் பாதுகாவலர் சங்கத்துக்கு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை காணமால் போனோர் பாதுகாவலர் சங்கத்தினர் இன்று புதன்கிழமை சந்தித்து பேசுவதென முடிவாகியிருந்தது. இதற்காக 52 பேர் கொண்ட சங்ககுழுவும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு வருகை தந்திருந்தது. நேற்று தாம் ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்பு கொண்டபோதே சந்திப்புக்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டதாக சங்கத் தினர் தெரிவித்துள்ளனர்.

காணாமல் போன தமது பிள்ளைகள், உறவினர்களுக்கு நடந்த கதி குறித்து ஜனாதிபதி அம்மாவை சந்தித்து ஒரு முடிவைக்காணுமாறு கோருவோம் என கொழும்புக்கு நாம் வந்தோம். ஆனால் அதுவும் சரிவராது போலுள்ளது. என்று காணாமல் போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் பெண்கள் நேற்று பெரும் ஆதங்கம் தெரிவித்தனர்.

கொழும்புக்கு வந்துள்ள 52 பேரைக் கொண்ட இச் சங்கத்தின் குழுவினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்க விருப்பம் தெரிவித்தனர். இதற்கான ஏற்பாடுகளை யாராவது செய்து தருமாறு இவர்கள் தமிழ் எம்.பி.க்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை யாழ். குடாநாட்டில் கைதாகி காணமால் போனோர் தொடர்பாக உரிய விசாரணைகளை மேற்கொள்ள மனித உரிமை ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் பணியாளர் நிமால் ஜி. புஞ்சிகேவாவை சந்தித்து அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸின் தலைவரும் எம்.பி.யுமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சிரேஷ்ட உப தலைவர் ந. குமரகுருபரன், மற்றும் மேல்மாகாண மக்கள் முன்னணியின் தலைவரும் எம்.பி.யுமான மனோகணேசன், செயலாளர் ஜெயரட்ணராஜா ஆகியோர் கோரியுள்ளனர்.

1990 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு கடல் வழியாக சென்ற போது கடற்படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன எம். மகாதேவன் என்பவர் தொடர்பாக விசாரணை நடத்துமாறும் இவர்கள் கோரியுள்ளனர். இச்சந்திப்பில் மேல்மாகாண மக்கள் முன்னணியின் கொழும்பு மேற்கு அமைப்பாளர் வேலணை வேணியன் மற்றும் காணாமல் போனவரது தங்கை மாதேவி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# தேசிய மாவட்ட மட்டங்களில் சர்வமதச் சமாதானக் குழுக்கள்!

(நமது நிருபர்)

மதங்களுக்கிடையிலான பதற்றத் தைத் தூண்டி நாட்டை அதலபாதாளத்தில் தள்ளிவிடுவதைத் தடுப்பதற்காக புத்தசாசன, கிறிஸ்தவ விவகார, இந்து விவகார, இஸ்லாம் விவகார அமைச்சுக்களின் ஏற்பாட்டில் தேசிய மற்றும் மாவட்ட மட்டங்களில் சர்வமத சமாதானக் குழுக்களை அமைக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அரச பேச்சாளர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் கூறப் பட்டுள்ளதாவது:-அண்மைக்காலமாக நாட்டில் ஏற்பட்டுள்ள மதங்களுக்கிடையிலான பதற்ற நிலையை அரசு உன்னிப்பாக அவதானித்து வருகிறது. கங்கொடவில சோமதேரர் மறைவு குறித்து மக்கள் சோகமுற்றுள்ள வேளையில் எதிர் பாராத சம்பவங்களுக்கு முகங் கொடுக்க நேரிட்டது துரதஸ்'டமான தாகும்.

நீண்ட காலமாக தேரர் போதித்த போதனைகளுக்கு எதிராக மதபேதங் களைக் கட்டவிழ்த்துவிட சிலர் எடுக்கும் முயற்சிகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்த மிலேச்சத்தனமான நடவடிக்கையிலிருந்து வேற்று மதத் தலைவர்களைப் பாதுகாக்க பல பௌத்த பிக்குகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

# புதுவருடத்தை முன்னிட்டு அமெரிக்காவில் கடும் பாதுகாப்பு!

எதிர் வரும் புத்தாண் டை முன்னிட்டு அமெரிக்காவில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆகாய, தரைமார்க்க தாக்குதல்கள் எவ்வகைப் பட்டதாக விருந்தாலும் அவற்றை எதிர் கொள்ள அமெரிக்கப் பாதுகாப்புப் படையினர் தயாராகவுள்ளதாக அங்கிருந்து கிடைக்கப்பெறும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஹெலிகொப்டர்களில் குறிதவறாமற் சுடும் வீரர்கள் நாடு முழுவதும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். தேவை ஏற்படின் பிரதான வீதிகள் சிலவும் மூடப்படலாமென அறிவிக்கப்படுகின்றது.

இவை தவிர பிரதான கட்டிடங்கள், சிற்றுண்டிச் சாலைகள் ஆகியவற்றின் கூரைகளிலும் படை வீரர்கள் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தருகின்றன. மக்கள் கூடும் பிரதான இடங்கள் களியாட்ட விழாக்கள் நடைபெறும் இடங்கள் ஆகிய வற்றுக்குச் செல்லும் பாதைகள் எங்கும் ஆங்க ாங்கே வீடியோ, புகைப்படக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. ஏற்பாட்டாளர்கள் தகவல் தருகையில் சென்ற வருடம் 750,00மக்கள் களியாட்ட விழாக்களில் குழுமியிருற்ததாகவும்



ஆனால் இவ்வருடம் இத்தொகை இன்னும் அதிகரிக்குமெனவும் கூறினார்.

நியுஜேர்சி கவனர் மக்றீவி தகவல் தருகையில் நியுயோர்க் நகரை நோக்கிப் பிரயாணம் செய்யும் பயணிகள் நீண்ட நேர தாமதத்தை எதிர் நோக்க வேண்டுமெனக் கூறினார்.

ரைம் ஸ்குயார் என்னும் இடத்தில் தெருவோர தபால் பெட்டிகள், கழிவுகளைச் சேகரிக்கும் பெட்டிகள் முதலானவை அகற்றப்பட்டுள்ளன. சாதாரண உடையில் பொலிசாரும் இராணுவத்தினரும் மக்களிடையே பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

# பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட ஈரானுக்கு இந்தியா உதவி!

பூகம்பத்தால் பாதித்த ஈரான் நாட்டுக்கு 25 டன் உதவிப் பொருட்களுடன் இந்திய விமானம் பாகிஸ்தான் வழியே பறந்து சென்றது.

சமீபத்தில் ஈரான் நாட்டின் தென் கிழக்குப் பகுதியிலுள்ள பாம் நகரில் மிகப்பெரிய பூகம்பம் ஏற்பட்டது. இதில் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியானார்கள். ஆயிரக் கணக்கானோர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். இவர்களுக்கு உதவி செய்ய பல்வேறு நாடுகள் உதவிப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் ஆகியவற்றை அனுப்பி வருகின்றன.

இந்நிலையில் இந்தியாவும் பாதிக்கப்பட்ட ஈரான் மக்களுக்கு உதவ முன்வந்தது. 25 டன் எடையுள்ள உதவிப் பொருட்கள் அனுப்ப முடிவு செய்தது. அதன்படி மருந்துப்பொருட்கள், போர் வைகள், மக்கள் தங்குவதற்கு டென்ட் அமைக்கப்பயன்படும் துணிகள் ஆகிய பொருட்களை இரண்டு விமானங்கள் மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

இந்திய ஏர்லைன் விமானம் ஜ.எல்-76 வகை இரண்டு சரக்கு விமானங்கள் இந்த பொருட்களை ஏற்றிக் கொண்டு நேற்று மதியம் 12.30 மணியளவில் புதுடெல்லியிலிருந்து புறப்பட்டது. இந்த விமானத்தில் 5 டாக்டர்களும், 60 மருந்தாளுனர்களும் செல்கின்றனர். இந்த டாக்டர்கள் பாம் நகரில் 75 படுக்கைகள் கொண்ட நடமாடும் மருத்துவமனையை அமைப்பார்கள். பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நான்கு வாரங்கள் அங்கு தங்கி சிகிச்சையளிப்பார்கள்.

ஏற்கனவே 600 டன் எடையுடைய வைட்டமின் சத்து நிறைந்த பிஸ்கட்டுகள் அவசரத் தேவைக்காக பாம் நகருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

உதவிப்பொருட்களை ஏற்றிய விமானம் பாகிஸ்தான் வழியாகப் பறந்து சென்றது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய விமானம் பாகிஸ்தான் வழியாகப் பறந்து செல்வது இதுவே முதல் முறையாகும்.

கடந்த 2002-ம் ஆண்டு இந்திய பாராளுமன்றம் மீது பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து பாகிஸ்தான் வழியாக இந்திய விமானம் பறப்பது தடை செய்யப்பட்டிருந்தது. பாகிஸ்தான் வழியாக கடைசியாக இந்திய விமானம் டெல்லியிலிருந்து ஆப்கானிஸ்தானிலுள்ள காபூலுக்குச் சென்றது.

## உலகச் செய்திகள்

# இந்தியாவிற்கு தகுதியுள்ளதாக ரஷ்யா வலியுறுத்துகிறது!

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர இடம் வகிக்க இந்தியாவுக்கு அனைத்து தகுதிகளும் உள்ளன என்று ரஷ்யா வலியுறுத்திக் கூறியுள்ளது.

இந்தியா, ஜெர்மனி, ஜப்பான், பிரேசில் ஆகிய நாடுகளுக்கு ஐ.நா. சபையில் நிரந்தர இடம் பெறுவதற்கான அனைத்து தகுதிகளும் உள்ளன என்று ஐ.நா. சபையின் ரஷ்ய தூதர் சேர்கெய்லாவ்ரோவ் நிருபர்களிடம் அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

ஐ.நா. சபை வளர்ந்த நாடுகள் மற்றும் வளரும் நாடுகள் ஆகிய இரண்டு தரப்பினரையும் சரிசமமாகக் கருதும் நிலையில் உள்ளது. எனவே வளரும் நாடான ஆபிரிக்காவுக்கும் ஐ.நா. சபையில் இடங்கொடுக்க வேண்டும். மேலும் நிரந்தர

அங்கம் வகிக்கும் உரிமை பெற்ற புதிய நாடுகளுக்கு வீட்டோ உரிமையும் கொடுக்கலாம் என்று அவர் சிபார்சு செய்தார்.

தற்போது உள்ள மாறுபட்ட சூழ்நிலையில் ஐ.நா. சபையின் இயக்கத்தில் ஒரு தயக்கம் உள்ளது. எனவே நம் சீர்திருத்தங்களை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்று பொறுத் திருந்து பார்க்க வேண்டும் என்றும் லாவ்ரோவ் குறிப்பிட்டார்.

# அணு நிலைய பட்டியல்களை இந்தியா பாக் கைமாறுகின்றது!

போர் என்று வரும் போது ஒரு நாட்டின் அணுசக்தி நிலையங்கள், ஆராய்ச்சி நிலையங்களைத் தாக்காமல் இருப்பதற்காகச் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி இந்தியாவும் பாகிஸ்தானும் தங்கள் நாடுகளில் உள்ள அணுசக்தி நிலையங்களின் பட்டியலை நாளை பரிமாறிக் கொள்கின்றன.

இந்தியாவும் பாகிஸ்தானும் அணு ஆயுத நாடுகள் என்று சர்வதேச நாடுகளால் அங்கீகரிக் கப்பட்டுள்ளன. இருநாடுகளிடமும் அணு ஆயுதங்கள் உள்ளன.

போர் என்று வரும் போது நாட்டின் அணுசக்தி நிலையங்கள் மற்றும் அணுசக்தி ஆராய்ச்சி நிலையங்கள் ஆகியவற்றைத் தாக்காமல் இருப்பதற்காக இந்தியாவும், பாகிஸ்தானும் ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டுள்ளன.

இந்த ஒப்பந்தத்தின்படி இருநாடுகளும் தங்களது அணுசக்தி நிலையங்கள் உள்ள இடங்களை பட்டியல்போட்டு பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டும். இந்த பரிமாற்றம் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் 1-ம் தேதி செய்து கொள்ளப்பட வேண்டும்.

கடந்த 1992-ம் ஆண்டு ஜனவரி 1-ம் தேதி முதன் முதலாக இருநாடுகளுக்கும் இடையே அணுசக்தி நிலையங்கள் பட்டியல் பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்டது.

பிறகு ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 1-ம் தேதி இந்த பட்டியல் பரிமாற்றம் நடந்து வந்தது. கடந்த 2001-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ம் தேதி இந்திய பாராளுமன்றத்தின் மீது பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதற்குப் பிறகு பதட்டமான சூழ்நிலை நிலவியபோதிலும் 2002-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி இதே போல பட்டியல் பரிமாற்றம் நடந்தது.

இந்த ஆண்டு (2003) ஜனவரி 1-ம் தேதியும் இதே போல பட்டியல் பரிமாற்றம் நடைபெற்றது. இப்போது 13-வது முறையாக நாளை 2004-ம் ஆண்டு ஜனவரி 1-ம் தேதி இதே போல அணுசக்திநிலையங்கள் குறித்த பட்டியல் பரிமாற்றம் நடைபெற உள்ளது.


# வை.கோ தொடர்பான வழக்கு தொடர்ந்து விசாரணை!

பொடா வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள வைகோ உள்ளிட்ட 8 பேர் பூந்தமல்லி பொடா நீதிமன்றத்தில் நேற்று பலத்த பாதுகாப்புடன் நீதிபதி ராஜேந்திரன் முன்பாக ஆஜர்படுத்தப்பட்டனர்.

அரசு தரப்பில் வழக்கறிஞர் ஜெயக்குமார், வைகோ தரப்பில் வழக்கறிஞர்கள் தினகர், தேவதாஸ், ஆவடி அந்திரிதாஸ் ஆகியோர் ஆஜரானார்கள். அரசு தரப்பு சாட்சிகள் மாயாண்டி, முத்துசாமி ஆகியோரை வைகோவின் வழக்கறிஞர் தினகர் குறுக்கு விசாரணை நடத்தினார். குறுக்கு விசாரணை இன்னும் தொடர்ந்து நடைபெறுகிறது.

நீதிமன்ற வளாகத்தில் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு துண்டுச் சீட்டு மூலம் பதில் அளித்த வைகோ கூறியதாவது:-

கடந்த 2002 வேலூர் சிறையில் என்னைப் பார்க்க கருணாநிதி வந்தபோது நான் ஜாமீனில் வெளியே வர வேண்டும் என



கேட்டுக் கொண்டார். அவரிடம் எனது நிலைப்பாட்டினை விளக்கினேன். உச்சநீதிமன்றத்தில் எனது ரிட் மனு மீது தீர்ப்பை எதிர் பார்த்துக் கொண்டிருப்பதாக அவரிடம் சொன்னேன். தற்போது உச்ச நீதிமன்றம் எனது ரிட் மனுவை டிஸ் மிஸ் செய்யவில்லை.

நான் என் வழக்கை விசாரிக்க சிறப்பு நீதிமன்றத்திற்கு வழி காட்டுவதாக அறிவுறுத்தி வழக்கு விவகாரத்தின் அடிப்படையில் தீர்ப்பளிக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் கூறியிருக்கிறது. தடை செய்யப்பட்ட ஒரு அமைப்புக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவிப்பதோ, கூட்டம் போடுவதோ பொடா சட்டத்தின் கீழ் குற்றம் ஆகாது. பயங்கரவாத செயல்களை ஊக்குவித்து செயல்படுத்தும் நோக்கம் நிரூபிக்கப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியுள்ளது.

இந்நிலையில் நானும் எனது சகாக்கள் 8 பேரும் வெளியே வரவேண்டும் என்றும், வெளியில் எனக்கு பணிகள் காத்திருக்கின்றன. இந்த வேண்டுகோளை அன்புக்கட்டளையாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என கருணாநிதி பத்திரிகையாளர்களிடம் கூறியுள்ளார். இன்றைய சூழலில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலையின் பின்னணியில் பல்வேறு முக்கிய காரணங்களை உத்தேசித்து கலைஞர் இதைவலியுறுத்தியிருப்பதாக நான் கருதுகிறேன். எனது சகாக்கள் 8 பேரும் ஜாமீன் கேட்டு சென்னை உயர் நீதி மன்றத்தில் மனுத்தாக்கல் செய் துள்ளனர்.

# முஷாரப்பின் தாக்குதலின் எதிரொலி தீவிரவாதிகளால் பாக். அச்சுறுத்தல்

முஷாரப் மீது தாக்குதல் எதிரொலியாக தீவிரவாதிகள் மூலம் பாகிஸ்தானுக்கு கடும் அச்சுறுத்தல் நிலவுவதாக அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவு செய்தித் தொடர்பாளர் ஆடம் எரிலி கூறியிருப்பதாவது:- பாகிஸ்தான் அதிபர் முஷாரப் மீது தீவிரவாதிகள் இரண்டு முறை கொலைவெறித் தாக்குதல் நடத்தியுள்ளனர். மீண்டும் மீண்டும் முஷாரப் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவது பாகிஸ்தான் தீவிரவாதிகள் மூலம் பிரச்சினைகளைச் சந்தித்துவருவது தெரிகிறது. தீவிரவாதிகள் மூலம் பாகிஸ்தானுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை சமாளிக்க பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வேண்டிய உதவிகளைச் செய்யத் தயாராக உள்ளது.

இது சம்பந்தமாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் காலின் பவல் அதிபர் முஷாரப்புடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். தீவிரவாதிகளின் கொலைவெறி தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்த பவல் தீவிரவாதிகளைச் சமாளிக்க உதவிகள் செய்யத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் தீவிரவாதிகளிடமிருந்து எச்சரிக்கையாக இருக்கும்படியும் முஷாரப்பை பவல் கேட்டுக் கொண்டார்.

ராவல்பிண்டியில் முஷாரப் மீது நடந்த தாக்குதலில் முஷாரப் அதிர்ஷ்டவசமாகத் தப்பிவிட்டார். ஆனால் அப்பாவி மக்கள் 15 பேர் கொல்லப்பட்டனர். இறந்தவர்கள் குடும்பத்தினருக்கும் தனது ஆழ்ந்த இரங்கலை பவல் தெரிவித்துக் கொண்டார். தீவிரவாதத்தை எதிர் த்து போராடுவதில் பாகிஸ்தானுடன் அமெரிக்கா சேர்ந்து செய ற்படும். அனைத்து நாடுகளுடன் தீவிரவாதிகள் பிரச்சினையில் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். இவ்வாறு எரிலி கூறியிரு ந்தார். இரண்டாவது முறையாக டிசம்பர் 14-ஆம் தேதி தீவிரவ ாதிகள் நடத்திய தாக்குதலிலும் முஷாரப் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். காஷ்மீர் பிரச்சினையில் இந்தியாவுடன் நல்லுறவு மேம்பட பாகிஸ்தானுக்கு வேண்டிய உதவி களைச் செய்ய அமெரிக்கா தயாராக உள்ளது என காலின்பவல் கூறியுள்ளார்.

# விளையாட்டு விருந்து


அண்மையில் நடந்து முடிந்த ''மொபிட்டல்'' டெஸ்ட் தொடரை இலங்கை அணி கைப்பற்றியமை யாவரும் அறிந்ததே. மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில் முதல் இரு போட்டிகளும் சமநிலையில் முடிவடைய மூன்றாவது போட்டியில் இன்னிங்ஸ் வெற்றி பெற்ற இலங்கை அணித் தொடரைக் கைப்பற்றியது. இத்தொடரில் இலங்கை, இங்கிலாந்து வீரர்களின் தனிப்பட்ட திறமை, வெளிப்பாடு இங்கே தொகுத்துத் தரப்படுகிறது.

**துடுப்பாட்டம்**

| இலங்கை | போட்டி | ஆ.இ. | ஓட்டம் | அ.கூ.ஓ | சராசரி |
|---|---|---|---|---|---|
| மஹேல | 3(5) | 1 | 334 | 134 | 83.50 |
| டில்சான் | 2(3) | 0 | 246 | 100 | 82.00 |
| சமரவீர | 3(5) | 1 | 214 | 142 | 53.50 |
| ஜெயசூரிய | 3(5) | 0 | 209 | 85 | 41.80 |
| சந்தன | 2(3) | 0 | 116 | 76 | 38.66 |
| சங்கக் கார | 3(5) | 0 | 165 | 71 | 33.00 |
| முரளிதரன் | 3(4) | 1 | 91 | 38 | 30.33 |
| தினுஷ | 2(3) | 1 | 56 | 51 | 28.00 |
| வாஸ் | 3(5) | 1 | 102 | 32 | 25.50 |
| தர்மசேன | 2(4) | 1 | 65 | 29 | 21.66 |
| அத்தப்பத்து | 3(4) | 0 | 83 | 35 | 20.75 |
| ஹசான் | 3(5) | 0 | 78 | 45 | 15.60 |
| தில்கார | 1(1) | 1 | 1 | 1 | - |
| **இங்கிலாந்து** | | | | | |
| வோகன் | 3(6) | 0 | 221 | 105 | 36.83 |
| தோர்ப் | 3(6) | 0 | 183 | 57 | 30.50 |
| வுச்சர் | 3(6) | 0 | 175 | 54 | 29.16 |
| ட்றெங்கொத்திக் | 3(6) | 0 | 167 | 70 | 27.83 |
| பிளின்டோப் | 3(6) | 0 | 143 | 77 | 23.83 |
| வேற்றி | 3(6) | 1 | 117 | 38 | 23.40 |
| கொலிங்வூட் | 2(4) | 0 | 89 | 36 | 22.25 |
| கைல்ஸ் | 3(5) | 1 | 74 | 18 | 18.50 |
| ஜோன்சன் | 1(2) | 0 | 29 | 26 | 14.50 |
| றீட் | 3(6) | 2 | 49 | 18 | 12.25 |
| ஹுசைன் | 2(4) | 0 | 46 | 17 | 11.50 |
| கோர்ட்லி | 2(3) | 1 | 16 | 12 | 8.00 |
| அன்டர்சன் | 1(2) | 1 | 2 | 1 | 2.00 |
| கொக்கார்ட் | 1(2) | 2 | 6 | 6 | - |







**பந்து வீச்சு**

| இலங்கை | போட்டி | ஓவர் | ஓ.அ.ஓ | ஓட்டம் | விக் | சராசரி | சி.பெ |
|---|---|---|---|---|---|---|---|
| முரளிதரன் | 3 | 231.4 | 109 | 320 | 26 | 12.30 | 7-46 |
| தில்கார | 1 | 24 | 7 | 82 | 4 | 20.50 | 3-27 |
| வாஸ் | 3 | 103.2 | 24 | 273 | 13 | 21.00 | 4.77 |
| ஜெயசூரிய | 3 | 90 | 22 | 158 | 5 | 31.60 | 2-5 |
| தர்மசேன | 2 | 87 | 19 | 228 | 4 | 57.00 | 1-36 |
| சந்தன | 2 | 63 | 18 | 148 | 2 | 74.00 | 2-82 |
| தினுஷ | 2 | 21 | 2 | 107 | 1 | 107.00 | 1-29 |
| ஹசான் | 3 | 1 | 0 | 1 | 0 | - | - |
| டில்சான் | 2 | 3 | 1 | 10 | 0 | - | - |
| சமரவீர | 3 | 8 | 3 | 20 | 0 | - | - |
| **இங்கிலாந்து** | | | | | | | |
| பிளின்டோப் | 3 | 97 | 20 | 221 | 9 | 24.55 | 3-42 |
| கைல்ஸ் | 3 | 197.3 | 49 | 539 | 18 | 29.94 | 5-116 |
| கோர்ட்லி | 2 | 81 | 18 | 302 | 6 | 50.33 | 2-62 |
| வேற்றி | 3 | 124.2 | 20 | 396 | 6 | 66.00 | 3-55 |
| ஜோன்சன் | 1 | 24 | 7 | 82 | 1 | 82.00 | 1-54 |
| ஹொக்கார்ட் | 1 | 29 | 6 | 82 | 1 | 82.00 | 1-33 |
| ட்றெஸ்கொத்திக் | 3 | 2 | 0 | 10 | 0 | - | - |
| வோகன் | 3 | 10 | 0 | 27 | 0 | - | - |
| கொலிங்வூட் | 2 | 16 | 3 | 37 | 0 | - | - |
| அன்டெர்சன் | 1 | 24 | 5 | 85 | 0 | - | - |

குறிப்பு:- ஓ.அ.ஓ - ஓட்டம் அற்ற ஓவர்
விக் - விக்கட்டுக்கள்
சி.பெ - சிறந்த பெறுமதி




# அறிவுப்பசி -09

1) கடந்த வாரம் இடம் பெற்ற உலகை உலுக்கிய பூகம்பம் ஈரானின் எந்த நகரில் இடம் பெற்றது.
2) உலக எயிட்ஸ் தினம் எப்போது கொண்டாடப் படுகிறது.
3)மலையக தமிழர்கள் ஒரு இலட்சம் பேர் 1949இல் ஒரே இரவில் வாக்குரிமையை இழக்கக் காரணமான சட்டத்தின் பெயர் என்ன?
4) தேங்காய்களை ஏற்றி இறக்கும் உழவு இயந்திர சாரதி ஏற்றி இறக்கும் கூலியாக 1KM தூரத்திற்கு ஒரு மூடைக்கு ஒரு தேங்காய் என்ற கணக்கில் பெற்று வந்தான். 50 தேங்காய்கள் கொண்ட இரு தேங்காய் மூடைகளை 50KM தூரத்திற்குக் கொண்டு போக வேண்டியிருந்தது. சாரதியின் நிபந்தனைப் படி சாதாரணமாக பார்த்தால் பயணம் முடியும் போது ஒரு தேங்காயும் எஞ்சியிருக்க முடியாது. எனினும் புத்திசாலியான ஒருவெனெனில் 25 தேங்காய்களையும் அதிபுத்திசாலியான ஒருவனெனில் 50 தேங்காய்களையும் கொண்டு செல்ல முடியும் எப்படி?
5) டெஸ்ட் கிரிக்கட் வரலாற்றிலே இதுவரை அதிக சதங்களைப் பெற்றுள்ள வீரர் யார்?
6) அவுஸ்திரேலிய நாட்டின் தேசிய மிருகம் எது.?
7)1,2,6,42,.....இத்தொடரில் அடுத்த எண் என்ன?
8) கண்மூடாது உறங்கும் உயிரினம் எது?
9) சர்வதேச பயங்கர வாத வலைப் பின்னலை அமைத்திருக்கும் பின் லேடனின் அமைப்பின் பெயர் என்ன?
10) ஒரு கடையிலே AB எனும் இரு சிப்பந்திகள் உள்ளனர். இவர்களில் ஒருவன் எப்போதுமே பொய் சொல்வான். ஒருவன் எப்போதுமே உண்மை பேசுவான். அதே போன்று அக்கடையில் இரு கடிகாரங்கள் உள்ளன. ஒன்று நல்லது மற்றது பழுதானது. இந்தத் தரவுகள் மட்டுமே உமக்குத் தரப்பட்டுள்ளன. எது நல்ல கடிகாரம் என்பதோ யார் உண்மையைப் பேசுவான் என்பதோ உமக்குத் தெரியாது. இந்த நிபந்தனையில் மேலே கூறப்பட்ட தரவுகளை மட்டும் மனதில் கொண்டு சிப்பந்திகளில் யாராவது ஒருவரிடம் ஒரு கேள்வியை மட்டும் கேட்டுக் கிடைக்கும் பதில் மூலம் நல்ல கடிகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் என்ன கேள்வி கேட்க வேண்டும்.

## அறிவுப் பசி 07 இன் விடைகள்

1) சஹாரா பாலைவனம்
2) டோலி
3) பேராசிரியர் கைலாச பிள்ளை
4) 69 ஓட்டங்கள்
5) பிக்காஸோ
6) கார்த்திகைப் பூ
7) 3.6
8) சயீட் அன்வர்
9) 1985இல் டாக்காவில்
10) 266.6KM

அறிவுப் பசி 07இல் பரிசு பெறும்
அதிஸ்டசாலி
சி. பரமேஸ்வரன்
சோமசுந்தரம் வீதி
பாண்டிருப்பு.

## பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

1) கு.தீபா
பிரதான வீதி
களுவங்கேணி.

2) ந.திவானு
சாகம வீதி
அக்கரைப்பற்று-8.

3) சி.கணேஸ்
கல்லடி உப்போடை
மட்டக்களப்பு.

4) இ.நிஷாந்தன்
மைதான வீதி
செங்கலடி.

5) ப. யசோதரா
நீதிமன்ற வீதி
திருக் கோவில்.

6) த.பாலசிங்கம்
பிரதான வீதி
களுவாஞ்சிக்குடி.

7) நா.லிசு
10ஆம் கட்டை வீதி
கொம்மாதுறை.

8) அ. செல்வம்
தேசிகர் வீதி
காரைதீவு.

9) து.லோஜிதவேணி
உடையார்வீதி
கல்முனை - 2.

10) இ.கஜேந்திரன்
மார்க்கட் வீதி
பட்டிருப்பு.

விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 08-01-2004
விடைகள் வந்து சேரவேண்டிய முகவரி
வியாழன் விருந்து
தமிழ் அலை
கொக்கட்டிச் சோலை.

# மீனகம் அணி வெற்றி பெற்றது.

தமிழீழ விளையாட்டுத் துறையின் மட்டு. அம்பாறை மாவட்ட விளையாட்டுத் துறையினரால் 2003ம் ஆண்டு இறுதி நிகழ்வாக லெப். கேணல் ஜீவன் உட்பட 8வேங்கைகளின் 2ம் ஆண்டு நினைவாகவும், படுவான்கரை பிரதேச இளைஞர்களின் திறமைகளை வெளிக்கொணரவும் நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியானது 27.12.2003 தொடக்கம் 29.12.2003 வரை இலுப்படிச்சேனை பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது 16 கழகங்கள் பங்கு பற்றின

இதில் ஆரம்ப நிகழ்வாக தமிழீழத் தேசியகொடியேற்றல் நிகழ்வை மட்டு அம்பாறை மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் தளபதி பிரபர் அவர்கள் ஏற்றி வைத்தார். தொடர்ச்சியாக 3 நாட்கள் நடைபெற்ற இந்தப் போட்டியானது மிகவும் திறமையான முறையில் நடைபெற்று இறுதி நாளான 29.12.03 அன்று பி.ப 3.30 மணிக்கு மாலை நிகழ்வுகள் இடம்பெற்றன. முதலாவது நிகழ்வாக பொதுச் சுடரேற்றல், இதனை ரசிகன் இசைக்குழுவின் பொறுப்பாளர் சீலன் ஏற்றி வைத்தார்.

அடுத்த நிகழ்வாக லெப். கேணல் ஜீவன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு ரசிகன் இசைக் குழு நிர்வாகப் பொறுப்பாளர் சிவ ராஜா மாலை அணிவித்தார்.

அடுத்த நிகழ்வாக தேசியக்கொடியேற்றலை பயிற்சி ஆசிரியர் அக்கினு மாஸ்ரர் ஏற்றி வைத்தார். இதில் முதலாவது இடத்தினை விடுதலைப்புலிகளின் மீனக அணியினர் பெற்றனர். அனைத்து பரிசளிப்பு நிகழ்வுகளும் லெப். கேணல் ஜீவன் அவர்களின் நினைவுத் தூபி அமையப் பெற்ற இலுப்படிச்சேனை முன்றலில் இடம் பெற்றது. முதலாவது இடத்தினைப் பெற்ற மீனக அணியினருக்கு வெற்றிக் கேடயத்துடன் பரிசுகளையும் மட்டு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ் அவர்கள் வழங்கி கௌரவித்தார்.

இரண்டாம் இடத்தினைப் பெற்ற நியூ கிறின் லைட் விளையாட்டுக் கழகத்திற்கு வெற்றிக் கிண்ணத்தையும், பரிசுகளையும் மட்டு. அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ் வழங்கி கௌரவித்தார்.

மூன்றாம் இடத்தனைப் பெற்ற அரசடித்தீவு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்திற்கு மட்டு அம்பாறை மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் தளபதி பிரபா வெற்றிக் கிண்ணத்தையும் பரிசுக ளையும் வழங்கி கௌரவித்தார்.

நான்காம் இடத்தைப் பெற்ற இலுப்படிச்சேனை சக்தி விளையாட்டுக் கழகத்திற்கு மட்டு அம்பாறை மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் தளபதி பிரபா வெற்றிக்கிண்ணத்தினையும் பரிசுகளையும் வழங்கினார்.

இது தவிர இச்சுற்றுப் போட்டியின் நன்நடத்தை அணியாக அம்பிளாந்துறை கதிரவன் விளையாட்டுக் கழகத்திற்கு மட்டு அம்பாறை பொருண்மிய மேம்பாடடுப் பொறுப்பாளர் நிஷாம் விசேட கிண்ணத்தை வழங்கினார்.

இச்சுற்றுப் போட்டியின் தொடர் ஆட்டநாயகனாக நியூ கீறின் லைட் விளையாட்டுக் கழக வீரர் முனீஸ்வரன் தெரிவாக, இவருக்கும் மட்டு அம்பாறை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் நிஷாம் வெற்றிக்கிண்ணத்தையும், பரிசில்களையும் வழங்கினார்.

இச்சுற்றுப் போட்டியின் சிறந்த வீரராக மீனக அணியின் குமரிவாகனனும், சிறந்த கோல் காப்பாளராக அதே அணியின் கோபினாத்தும் தெரிவு செய்யப்பட்டார். இவர்களுக்கான பரிசினை மட்டு அம்பாறை புனர்வாழ்வு மகளிர் பொறுப்பாளர் கோமதி வழங்கி கௌரவித்தார்.







## காத்தான்குடி அரசியல் இலாபம் தேடுகிறதா?

இலங்கை மின்சார சபையின் கல்லடி பரிவர்த்தனை நிலையமானது காத்தான்குடி, ஏறாவூர் போன்ற பகுதிகளில் தமது உப அலுவலகங்களை ஏற்படுத்தியதன் மூலம் அந்தந்த பகுதிகளுக்கான அனைத்து மின்சாரம் தொடர்பான விடயங்களுக்கும் இவை பொறுப்பாக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் எமது ஆரயம்பதி பிரதேசமானது காத்தான்குடி உப அலுவலகத்தின் கீழே உள்ளது. இங்கு கடமை புரிபவர்களில் பெரும்பான்மையினர் முஸ்லிம்களாகவும் ஒரு சிலரே தமிழராகவும் காணப்படுகின்றனர். இந் நிலையில் சட்ட விரோதமான முறையில் மின்சாரத்தைப் பெற முயற்சிக்கின்றவர்களுக்கு இவ் வலுவலகமானது சட்ட நடவடிக்கையாக நீதி மன்றின் முன் அவர்களை நிறுத்தி தண்டப் பணத்தையும் அறவிடும் படியாகவும் வைத்து விடுகின்ற நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றமை அனைவரும் அறிந்ததே. இவ்வாறு சட்ட விரோதமான முறையில் மின்சாரத்தைப் பெற முயற்சிப்பவர்கள் ஏழை மக்களாகவும் பரீட்சைக்காக தம்மைத் தயார்படுத்தும் சில ஏழை மாணவர்களுமே இருக்கின்றனர். இரவு வேளைகளில் எமது பிரதேசத்தினுள் கண்காணிப்புக்காக வருபவர்களில் அநேகமானவர்கள் முஸ்லிம்களாக இருப்பதால் அவர்களிடத்தில் எவ்வாறு தமது நிலமைகளை தெளிவுபடுத்தி னாலும் அவற்றை உதாசீனம் செய்துவிட்டு உரிய நடவடிக்கை எடுக்கின்றனர்.

இவ்வாறு செயற்படுகின்ற காத்தான்குடி உபமின்சாரசபை அலுவலகம் கடந்த 15.12.2003 அன்று ஆரயம்பதி ஆர்.கே.எம் மகா வித்தியாலயத்தினுள் கட்டப்படுகின்ற 3 மாடி கட்டடத்திற்கான ஒப்பந்தக்காரர் அவரது பணியாளர்கள் இரவு வேலைகளைச் செய்வதற்காக சட்ட விரோதமான முறையில் திருட்டுத்தனமாக மின்சாரத்தைப் பெற்று தமது வேலைகளைச் செய்து கொண்டிருந்த வேளையில் ஒரு நலன் விரும்பி காத்தான்குடி உபமின்சாரசபை அலுவலகத்திற்கு தொலைபேசியின் மூலம் பல தடவைகள் இதனைத் தெரிவித்தும் எந்த விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாததையடுத்து மின்சாரப் பொறியியலாலருடன் தொடர்பு கொண்டு இந்த நிலமையினை விளக்கியதைத் தொடர்ந்து அங்கு காலதாமதமாகி வந்த கண்காணிப்புப் பிரிவினர் தங்களை மன்னித்து கொள்ளுமாறும் மேலிடத்து உத்தரவு என்றும் வந்ததற்காக சிறு துண்டுவயரை வெட்டியெடுத்துச் செல்வதாகவும் கூறி விட்டனர். இவ்வாறு செய்வது முறையா என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

## தமிழீழப் பாடல்கள் ஒலிக்காதா?

விடுதலைப் புலிகளின் போராட்டங்களை, விடுதலை உணர்வுகளை வெளிக்கொணரும் பாடல்கள் தனியார் பயணிகள் பஸ் வண்டிகளில் ஒலிக்க வேண்டும். இது தமிழ் மக்கள் எதிர்பார்ப்பாகும்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தனியார் பஸ் உரிமையாளர்கள் தனியார் பஸ் சங்கத்தினர் இதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் பயணிகள் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் வண்டிகளில் ஒலிபரப்பு சாதன வசதியுடைய வாகனங்கள் அதிகளவில் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. இவற்றை விட புத்தம் புதிய பஸ் வண்டிகள் பல கதுருவெல, திருகோணமலை, வவுனியா, கொழும்பு சேவையில் ஈடுபடுகின்றன. இவ்வாறு தனியார் போக்குவரத்து சேவை போர் ஓய்வு நிலையில் வளர்ச்சியடைந்துள்ளது. இத்தகைய ஒரு நிலையில் தமிழீழப் பாடல்கள் ஒலிபரப்புவதால் தமிழ் மக்களின் போராட்ட உணர்வுகளுக்கு உரமூட்டக் கூடியதாக அமையும்.

எனவே இவ்விடத்தில் தனியார் பஸ்உரிமையாளர்கள், தனியார் பஸ்சாரதி, நடத்துனர்கள் தனியார் பஸ் சங்கத்தினர் ஆகியோர் ஒன்றினைந்து முயற்சி மேற்கொண்டால் இவ்விடத்தில் வெற்றியைப் பெறமுடியும். எனவே புதிய 2004ம் ஆண்டில் இந்த நடைமுறையை அமுல்படுத்த வேண்டுகிறோம்.

**பயணிகள்.**

*அன்புடன் வாசகர்களுக்கு!*

*எமது தாயக மண்ணில் அன்றாடம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உங்கள் பகுதிகளில் செய்ய வேண்டிய அபிவிருத்திகள், புறக்கணிப்புகள், அதிகாரிகளின் ஊழல்கள், மோசடிகள், .ன்னும் எத்தனையோ சம்பவங்களை மனதிற்குள் பூ ட்டி வைக்க வேண்டாம்.*

*தமிழ் அலையில் வெளிக்கொணருங்கள். தமிழ் அலையில் "அலையின் தேடல்" பகுதி உங்கள் ஆக்கங்களை பிரசுரிப்பதற் காகக் காத்திருக்கின்றது. அதன் வாயிலாக வெளிவருவதால் உங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.*

*எனவே உங்கள் பிரதேசத்தில் நடைபெறும் சம்பவங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்.*

அனுப்ப வேண்டிய முகவரி
அலையின் தேடல்,
பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.

# அவுஸ்திரேலிய - இந்திய அணிகள் சமநிலையில்

அடிலெய்டில் நடைபெற்ற 2-வது டெஸ்ட் போட்டியில் தோல்வியுற்றதை சரிக்கட்டும் விதமாக, மெல்போர்னில் நடைபெற்ற 3-வது டெஸ்ட் போட்டியில் 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்று தொடரில் 1-1 என்ற சமநிலையை ஏற்படுத்தியது.

நேற்றைய கடைசி மற்றும் 5-ம் நாள் ஆட்டத்தின் போது வெற்றிக்கு 95 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் களம் இறங்கிய அவுஸ்திரேலிய அணி ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் ஜஸ்டின் லாங்கரின் விக்கெட்டை மட்டும் இழந்து 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

மேத்யூ ஹெய்டன் 53 ஓட்டங்களுடனும், ரிக்கி பொண்டிங் 31 ஓட்டங்களுடனும் இருந்தபோது, உணவு இடைவேளைக்குச் சற்று முன்னர் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.

அனில் கும்ப்ளேயின் பந்தில் பவுண்டரி அடித்து அவுஸ்திரேலிய அணி வெற்றி இலக்கை எட்ட உதவினார் ஆட்ட நாயகன் விருதுபெற்ற ரிக்கி பொண்டிங்.

22.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 97 ஓட்டங்களை எடுத்து அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது. இந்த நிலையில் தொடர் யாருக்கு? என்பதை முடிவு செய்யும் இந்த தொடரின் கடைசி மற்றும் 4-வது டெஸ்ட் போட்டி வரும் 2-ம் திகதி சிட்னியில் துவங்குகின்றது.

இந்தப் போட்டியோடு கிரிக் கெட்டிலிருந்து ஓய்வு பெற இருக்கும் தலைவர் ஸ்டீவ் வோவின் சொந்த ஊர் சிட்னி என்பது குறிப்பிடத்தக்கது.

## அவுஸ்திரேலிய இந்திய இறுதிப்போட்டியில் கிலெஸ்பி மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார்.


இந்தியாவுக்கு எதிராக சிட்னியில் நடைபெறவிருக்கும் 4-வது டெஸ்ட் போட்டிக்கான அவுஸ்திரேலிய அணியில் கில்லெஸ்பி சேர்க்கப்பட்டுள்ளார். ஆனால், அவரது உடற்தகுதி பரிசோதனைக்கு உட்பட்டது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையேயான டெஸ்ட் தொடரின் கடைசிப் போட்டி வரும் வெள்ளிக்கிழமை சிட்னியில் துவங்குகின்றது. இந்தப் போட்டிக்கான 13 பேர் கொண்ட அவுஸ்திரேலிய அணியில் கில்லெஸ்பி சேர்க்கப்பட்டுள்ளார். தசைப்பிடிப்பின் காரணமாக மெல்போர்னில் நேற்று முடிந்த 3-வது டெஸ்டில் விளையாடாத கில்லெஸ்பி, 11 பேர் கொண்ட அணியில் இடம் பிடிக்க வேண்டும் எனில் உடற்தகுதியை நிரூபிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தசைப்பிடிப்பில் இருந்து குணமடைந்து வரும் கில்லெஸ்பியின் உடற்தகுதி அவுஸ்திரேலிய அணியின் மருத்துவரால் தொடர்ந்து கண்காணிக்கப்படுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

அடிலெய்டு டெஸ்டில் இருந்து காயம் காரணமாக அவதிப்பட்டு வரும் கில்லெஸ்பி தற்போது நல்ல முறையில் குணமாகி வருவதாகவும் அவர் குணமடையும் விதம் உற்சாகமளித்து இருப்பதாகவும் அவுஸ்திரேலிய அணியின் மருத்துவர் எர்ரோல் அல்காட் தெரிவித்துள்ளார்.

தமிழ்அலை
Tamilalai
தினசரி




## படைத்துறைக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு வவுனியா மாணவர் ஒன்றியம் கண்டனம்

(வவுனியா நிருபர்)

வரவு செலவுத் திட்டத்தில் படைத்துறைச் செலவீனங்களுக்கு அதி கூடிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டமை தொடர்பாக வவுனியா வளாக மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சமாதானத்திற்காக மக்கள் ஏங்கித் தவிக்கும் சூழ்நிலையில் அரசு படைத்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்துள்ளமை மீண்டும் போர் ஏற்படுமா என்ற அச்சத்தை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

சமாதானத்தை எதிர்த்து நிற்கும் கட்சிகளும் பேரினவாத கட்சிகளும் வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்கியுள்ளன.

அரசு சமாதானத்தை இலக்காகக் கொண்டிருந்தால் ஏன் இவ்வாறு நிதி ஒதுக்க வேண்டும்.

எனவே உயர் கல்விச் சமூகம் என்ற வகையில் வவுனியா வளாக மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

## புதிய ஆண்டில் அமைதி பிறக்கட்டும்

### வெள்ளிமலை எம்.பி

(நமது நிருபர்)

இவ்வாண்டு இலங்கை வாழ் மக்களுக்கு நல்ல வருடமாக நாடளாவிய ரீதியில் நறுமணம் வீசி கசப்புணர்வுகளை மறந்து குறுகிய நோக்கம் கொண்டவர்களின் மனதில் நல்ல சிந்தனைகள் உண்டாகி நாட்டில் ஒற்றுமை மலர்ந்து அனைவரும் ஒரு மித்த மனதோடு அச்ச உணர்வுகள் நீங்கி புது வருடத்தில் புதுயுகத்துடன் உரியவர்களுக்குரிய அனைத்து உரிமைகளும் கிடைத்து நாட்டில் இயல்பு நிலை உண்டாக வாழ்த்துக்கள்.

## மட்.பாடசாலை குறைபாடுகளை தீர்க்க யுனிசெப் திட்டம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வருடம் சகல பாடசாலைகளிலுமுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய யுனிசெவ் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மலசல கூட வசதிகள், நீர்த்தாங்கிகள், தளபாட வசதிகள், மின் இணைப்பு வசதி, சூரிய மின் கலங்கள், மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் ஆகியவை வழங்க யுனிசெவ் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இதேவேளை நெகொட் திட்டத்தின் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் நிரந்தர கட்டிட தளபாட வசதிகளை வழங்கவுள்ளது.

## ஜனவரி 5ல் தொழிநுட்ப கற்கை நெறிகள் ஆரம்பம்

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பில் இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் புதிய மாணவர்க்கு 2004ஆம் ஆண்டிற்கான முழுநேர கற்கை நெறிகள் எதிர்வரும் 5ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

பகுதிநேர மாணவர்களுக்கான கற்கை நெறிகள் ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென கல்லூரி அதிபர் எம்.குணரெத்தினம் தெரிவிக்கிறார்.

இக்கல்லூரியின் இரண்டாம் வருட மாணவர்களுக்கான சகல கற்கை நெறிகளும் ஜனவரி 19ம்திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரியில் உலக கனேடிய பல்கலைக்கழக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படவுள்ள மூன்று பயிற்சி நெறிகள் உட்பட இருபத்தாறு பயிற்சி வகுப்புக்களுக்கான மாணவர்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளதாக அதிபர் குணரெத்தினம் மேலும் கூறினார்.

**சித்தாண்டி...**

தரிசனம் ஆகிய சிறப்பு பூசைகளுடனும் திருவமுது பகிர்தல் ஆகிய பாரம்பரிய பக்தி பூர்வ கொண்டாட்டத்துடனும் இனிது நிறைவு பெறும்.

தொடர்ந்து நாள் தோறும் அதிகாலை கூட்டுப் பிரார்த்தனை, ஊர்வலம் திருவெம்பாவை ஓதுதல், பூசை என்பன இடம்பெறும்.

## ஜனாதிபதி அமைச்சுக்களை பொறுப்பெடுத்தால் பொருளாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது

### அமைச்சர் இம்தியாஸ்

(நமது நிருபர்)

ஜனாதிதி அமைச்சுக்களை பொறுப்பேற்றதை அடுத்து நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை சமாதான முயற்சியில் மாத்திரமன்றி, நாட்டின் பொருளாதாரத்திலும், பாதுகாப்பிலும் பாரிய தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதாக தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

நூறாவது தொலைத் தொடர்பு நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றும் போது அமைச்சர் இதனை தெரிவித்தார். கக்மன மாகன்துன பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை நூறாவது தொலைத் தொடர்புகள் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மக்களின் ஆணையுடன் ஆட்சிபீடம் ஏறிய அரசாங்கத்தை கவிழ்த்து தமது அதிகாரத்தை மேல் ஓங்கச் செய்ய ஜனாதிபதி எடுத்த முயற்சியினால் தற்போது சிக்கல் நிலை தோன்றியுள்ளது இந்த முயற்சியினால் சமாதான முயற்சிக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

## சிறிலங்காவின் மனித உரிமை மீறல் குறித்து ஆசிய மையம் கண்டனம்

புதுடில்லியை தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகளுக்கான ஆசிய மையம் இலங்கையின் அரசியல் மற்றும் சிவில் உரிமை மீறல்கள் குறித்து கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து இந்த மையம் வெளியிட்டுள்ள 139 பக்க அறிக்கையில் 2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்ட நடைமுறைகளை சிறிலங்கா அரசு கடைப்பிடிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தன்னிச்சையான கைதுகள், தடுத்து வைப்பு, சித்திரவதைகள், சிறையில் பாலியல் பலாத்காரம், சட்டத்திற்கு புறம்பான கொலைகள், காணாமல் போதல், பத்திரிகைச் சுதந்திர மீறல், நீதித்துறையின் சுதந்திரம் போன்ற பல்வேறு மனித உரிமை மீறல்கள் இலங்கையில் நடைபெற்றிருப்பதாக இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு சித்திரவதை ஒரு குற்றச்செயல் என இலங்கையில் அங்கீகரிக்கப்பட்டிருந்தும், சிறிலங்கா அரசு 43 காவல்துறை அதிகாரிகள் மீதே இதுவரை குற்றப் பத்திரிகைள் தாக்கல் செய்து, 12 காவல்துறை அதிகாரிகள் மீதே ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல்களை மேற்கொண்ட காவல்துறை அதிகாரிகளுக்கு தண்டனை வழங்கப்படாமல் இருப்பது, மனித உரிமை மீறல்களை மேலும் ஊக்குவிக்கவே வழிகோலும் எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## ஜனவரி 5ம் திகதி அனைத்து பாடசாலைகளும் திறப்பு

(நமது நிருபர்).

மூன்றாம் தவணை விடுமுறைக்காக மூடப்பட்டுள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள பாடசாலைகள் அனைத்தும் எதிர்வரும் ஜனவரி மாதம் 5ம் திகதி மீண்டும் திறக்கப்படும் என்று கல்விஅமைச்சு தெரிவித்துள்ளது.

கல்விப் பொதுதராதரப் உயர்தரபரீட்சை நிலையங்களாக பயன்படுத்தப்படாத பாடசாலைகள் 2004ம் ஆண்டிற்கான முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகள் ஜனவரி 5ம்திகதி முதல் ஏப்ரல் 2ம் திகதிவரை இடம் பெறும் என்று கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை உயர்தரப் பரீட்சை நிலையங்களாக பயன்படுத்தப்படும் பாடசாலைகள் ஜனவரி 5ம் திகதி முதல் மார்ச் 30ம் திகதி வரைஇடம் பெறும் என தெரிவிக்கப்படுகின்றது. முஸ்லிம் பாடசாலைகள் அனைத்திற்குமான கல்வி நடவடிக்கைகள் ஜனவரி 5ம் திகதி முதல் ஏப்ரல் 8ம் திகதி வரை இடம்பெறும் என்று சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு கிழக்கு மாகாண அலுவலர்களுக்கான இடமாற்றம் இருமாதங்களுக்கு பிற்போடப்பட்டது

(ஏறாவூர் நிருபர்)

வடக்கு கிழக்கு மாகாண இணைந்த சேவை அலுவலர்களுக்கு மாகாண பொது நிருவாக அமைச்சினால் வழங்கப்பட்ட வருடாந்த இடமாற்றங்கள் இரு மாதங்களுக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

ஜனவரி முதலாந் திகதி முதல் வழங்கப்பட்ட இடமாற்ற உத்தரவுகள் 2004 மார்ச் முதலாந் திகதியில் செயற்படுமென மாகாண பொது நிருவாக அமைச்சின் செயலாளர் திருமதி கமலாம்பிகை சிவசிதம்பரம் அறிவித்துள்ளார்.

திணைக்களங்களில் கணக்கு வேலைகள் மற்றும் சில செயல் திட்டங்கள் நிறைவு செய்யப்பட வேண்டியிருப்பதனால் மாகாண அமைச்சின் செயலாளர்கள் மற்றும் திணைக்கள தலைவர்கள் ஆகியோர் மாகாண பொது நிருவாக அமைச்சு மற்றும் மாகாண ஆளுநர் ஆகியோரிடம் தொடர்ச்சியான வேண்டுகோள் விடுத்ததையடுத்து இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## ஊழியர் வரவை பதிவு செய்யும் நேர இயந்திர முறை இரத்து

(நமது நிருபர்)

பொது நிர்வாக, முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் ஊழியர் வரவை பதிவு செய்யும் நேர இயந்திய முறை இன்று முதல் ரத்து செய்யப்படவுள்ளது.

அரச ஊழியர்களுக்கு அதிக சுதந்திரத்தை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் முதலில் அமைச்சு இந்த நடைமுறையை பரீட்சித்துப் பார்ப்பதாக பொது நிர்வாக அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் பலன் அளித்தால் அடுத்து மூன்று மாதங்களில் ஏனைய அரச அலுவலகங்களிலும் இந்தநடை முறையை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதிய திட்டத்தின் மூலம் அமைச்சின் ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனியாக வரவுப் பதிவுகள் இடம்பெறும் என்று அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. ஒரு பிரிவிற்குரிய வரவுடாப்பை அந்த பிரிவுக்குரிய அதிகாரியே மேற்பார்வை செய்வார் என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## ஒலிபெருக்கி சாதனங்கள் கையளிப்பு

(எஸ்.ரவீந்திரன்)

ஒறுகாமம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஊடாக சித்தி விநாயகர் ஆலயத்திற்கு புது வருடத்தை முன்னிட்டு 50,000 ரூபா பெறுமதியான ஒலி பெருக்கிச் சாதனங்கள் மின் பிறப்பாக்கி போன்றவற்றை வெள்ளிமலை எம்.பி. நேற்று ஆலயத்தில் வைத்து ஆலய நிர்வாகிகளிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் வெல்லாவெளி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் உத்தியோகத்தர் எஸ். சிவலிங்கமும் கலந்து கொண்டார்.

**கல்குடா...**

ஆரம் பிக்கப்படவுள்ளன.

இதேவேளை போர்ச் சூழலையடுத்து தற்காலிகமாக வேறு இடங்களில் இயங்கும் நான்கு பாடசாலைகள் அதன் சொந்த இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.

தரவைப் பாடசாலை, கிரானிலும், புனானை பாடசாலை, வாழைச்சேனை தருமபுரத்திலும், புலிபாய்ந்தகல் பாடசாலை எஸ்வளைவு கிழக்கிலும், பலாக்காட்டு வெட்டை பாடசாலை தியாவெட்டுவானிலும் இயங்கி வருகின்றன. இப்பாடசாலை அதன் சொந்த இடங்களுக்கு இடமாற்றப்படவுள்ளதாகவும் கேசவன் தமிழ்அலைக்குத் தெரிவித்தார்.

**முச்சக்கர வண்டி...**

பயணிகள் எதிர்நோக்கும் அசௌகரியங்களை கருத்தில் கொண்டு உள்ளூராட்சி மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினையடுத்து இருதரப்பினருக்குமிடையே முறுகல் நிலை உருவானது.

பிரதான வீதியோரத்தின் இருபத்தைந்து அடிக்குட்பட்ட பிரதேசத்தில் நான்கு முச்சக்கர வண்டிகள் மாத்திரம் சுழற்சி முறையில் நிறுத்தப்பட வேண்டும்.

ஜனவரி பத்தாம் திகதி முதல் வண்டியொன்றுக்கு தினமும் ஐந்து ரூபா வரி செலுத்துவது தொடர்ச்சியாக மூன்று நாட்களுக்கான வரி செலுத்தப்படாதவிடத்து வண்டியின் தரிப்பிட அனுமதி இரத்துச் செய்வதென்றும் இப்பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

**வவுனியாவில்...**

ட்டன.

இது தொடர்பாக வவுனியா பதில் நீதவான் சிற்றம்பலம் சடலங்களை பார்வையிட்டதுடன் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் இதுவரை 10 பேர் இவ்வாறு மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் கொலை நடைபெற்ற பகுதி சிறிலங்காப் படையினரின் கட்டுப்பாட்டு பகுதி என்பதால் படை தரப்பு சம்பந்தப்பட்டிருக்கலாம் என பொது மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இப் பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 01.01.2004 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.